475

ஸம்புடம் 12
ஸஞ்சிகை 3

ஸ்ரீ:

நந்தன வருஷ
பங்குனி மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில்
மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ
திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப
ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகனின்

நினைவு மலர்

ஸம்பாதகர்

.. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசாரியர், M. A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

தனிப்ரதி விலை 0—4—0

..,

MARCH 1953
VOL 12 NO 3.

ஸ்ரீ:

42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்

திருநாமம் ... ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன்

பூர்வாச்ரம திருநாமம் ... இஞ்சிமேடு மாடபூசி வித்வான் ஸ்ரீ.உ.வே. ரங்கநாதாசார்ய ஸ்வாமி

அவதாரம் ... பஹுதான்யஸூ தைமீ உத்திராடம் (21—1—1879)

ஆஸ்தான வித்வான் ... ஸ்ரீ காருகுறிச்சி அழகியசிங்கர் காலம்

ஆச்ரமஸ்வீகாரம் ... சுக்லஸூ சித்திரைமீ 9உ சுக்லத்ரயோ ஞாயிற்றுக்கிழமை (21—4—1929)

ஆஸ்தானத்தில் பட்டாபிஷேகம் ... விஷுஸூ ஐப்பசிமீ 8உ சுக்லப வெள்ளிக்கிழமை (24—10—1941)

பரமபதத்திற்கு எழுந்தருளியது—நந்தன வருஷம் மாசி மாதம் 18மீ (1— ஞாயிற்றுக்கிழமை.

ப்ருந்தாவனம்— திருவள்ளூர்.

செய்தருளிய கைங்கர்யங்கள் ... 1. வேதபாடசாலை 2. ப்ரபந்தபாட 3. ஸம்ஸ்க்ருத காலேஜ் 4. பத்ரிகைகள் [1. ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா (தமிழ்) 2. ஷை (ஹி 5. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் வெள்ளிமண்டபத்தை புதுப்பித்தது. 6. ஸ்ரீரங்கம் திரு எவ்வு ளூர் திருப்பதி முதலிய பல திவ்யதேசங்களில் மடங்களை புதுப்பித்தது. 7. காஞ்சீபுரம் தி எவ்வுள்ளூர் திருப்பதி எம்பெருமான்களுக்கு திருவாபரணங்கள் ஸமர்ப்பித்தது. 8. மாலோ வித்வத் ஸபையை ப்ரதிவருஷம் நடத்திவந்தது. 9. 'மாலோல முத்ராலயம்' என்ற பெயர் கொண்ட ஓர் அச்சுயந்த்ரசாலையை அமைத்தது.

ஸ்ரீ அழகியசிங்கரருளிய க்ரந்தங்கள் — 1. ந்யாஸநிஷ்டாமீமாம்ஸா 2. உ நிஷ்டாபரணம் 3. உக்திநிஷ்டாபரிஜ்ஞோத்யோதம் 4. கீதார்த்தஸங்க்ரஹ வ்யாக்யா க்ருத்திகாதீப காலநிர்ணய: 6. உபாகர்மகாலநிர்ணயாதய: 7. ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரவ்யாக்யா ஸ்ரீ ஸாரபோதிநீ. 8. விசிஷ்டாத்வைதவேதாந்தகோச:

வேதாந்ததீபிகையில் வந்த உபந்யாஸங்கள்—1. ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந் மஹாதேசிகன் வைபவம் 2. கீதார்த்தஸங்க்ரஹரக்ஷா வ்யாக்யானம் 3. மதப்ரஷ்ட ப்ராயச்சி த்தமும் தர்மசாஸ்த்ரங்களும். 4. ஆசார்ய மஹிமை. 5. அஹோபில க்ஷேத்ரமும் இரண் கந்தர்வர்களும் 6. ஸத்ஸங்கவைபவம் 7. மதுவித்யாவிசாரம். 8. வைராக்யத்தால் உ டாகும் ஸுகம். 9. அர்ச்சாவதார வைபவம். 10. சிலமில்லாச்சிறியனும், அவ

இவரால் சோதிதமான க்ரந்தம்— தத்வடீகை.

பூமிகை எழுதப்பட்ட க்ரந்தங்கள்...1. தத்வடீகை 2. 41வது பட்ட சிங்கரின் சதாபி

அச்சிடவேண்டிய க்ரந்தங்கள்— 1. ருக்வேதாஹ்நிகம் 2. ச்ரா 3.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 12 } நந்தன ஸூ பங்குனி மீ { ஸஞ்சிகை 3

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபில மடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின்

சரமச்லோகங்கள்

(1)

[ஸ்ரீ. உப. ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிகதர்சனவிஜயத்வஜ, புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ:

(2)

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L., திருப்பதி.]

[illegible] (க)

[illegible] (உ)

நந்தன வருஷம் மாசி மாதம் கிருஷ்ண பக்ஷம் ப்ரதமை உத்தரநக்ஷத்ரம்கூடிய ஞாயிற்றுக்கிழமையன்று பக்தி, ஜ்ஞாநம், வைராக்யம், அநுஷ்டாநம் எல்லாவற்றாலும் விளங்கிய ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீ ஸ்வர்ணம் கிருஷ்ணமார்ய மஹாதேசிகனின் கிருபாகடாக்ஷத்தால் பரமபதித்தார்.

[illegible] (ங)

உலகத்தில் சில வஸ்துக்களின் பெயர் நேர் விபரீதமான அர்த்தத்தைத் தரும். உதாஹரணமாக 'தர்சம்' என்கிற பதத்தைப் பார்ப்போம். இது அமாவாஸ்யையின் பெயர். இதற்கு சந்திரனைப் பார்க்கும் திதி என்று ஸ்வரஸமான அர்த்தம். ஆனால் எந்தத்திதியில் சந்திரனைப் பார்ப்பதில்லையோ அந்தத்திதி என்று நேர் விபரீதமான பொருளைக் குறிக்கின்றது. ஓ ஸம்வத்ஸரமே! நந்தந என்கிற உனது பெயரும் அதுபோன்றதே. ஸந்தோஷப்படச் செய்வது என்பது இதற்குள்ள பொருள். நீ எங்களை ஸந்தோஷப்படுத்தவில்லையே. ஜ்ஞாநவைராக்யாதி குணநிசயத்தாலே எல்லோராலும் வெகுமதிக்கப்பட்ட ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை அபஹரித்துப்போய் பரமதுக்கத்தையன்றோ உண்டாக்கியிருக்கின்றாய்.

संभवो मुनिवरस्य कुम्भ उद्या
हारायते तपः प्राविदः । मास!
कुम्भ! कथं त्वयाद्य तव क्षयाय
मुनिवरो ह्रीयत ॥ (४)

கும்பத்தில் முனிவருக்கு உத்பத்தி என்று விஷயமறிந்த பெரியோர்களிடமிருந்து கேட்டிருக்கின்றோம். ஓ இந்த மாஸமாகிற கும்பமே! உன்னிடத்தில் இது என் வேறு விதமாயிருக்கின்றது? உன்னிடத்தில் இந்த முனிவருக்கு லயமன்றோ ஏற்பட்டிருக்கின்றது, உத்பத்தியில்லையே.

परिचरणपरास्ते सूरयस्सन्त्यसंख्याः
परमपद उदीर्णं तन्निगमैर्य
विद्म । परमपुरुष! रङ्गश्रीशठारिं
यतीन्द्रं कस्मिन्निदानीं तं तु नेतुं
क्षमा ते ॥ (५)

ஓ பரமபுருஷனே! பரமபதத்தில் உன்னுடைய பரிசாரணத்திற்காக எண்ணிறந்த திவ்ய ஸூரிகள் இருக்கின்றார்கள் என்கிற இந்த உண்மை வேதங்களால் அறியக்கிடக்கின்றது. அப்படியிருக்க, இப்போது இந்த ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனை அங்குக்கொண்டு போவதில் உனக்கு என் இவ்வளவு துடிப்பு? சொல்லு பார்ப்போம்.

वपुः सौभाग्यसारं वचनसरणिः
सस्मितमृदुमृदुर्या शीता दृष्टिः स्थिति-
र्विश्वक्षेमनिरता । विघ्नन् सत्या
रङ्गाधिपशठरिपोर्मतल्लिकां कयापि
षीहाहृतं जगति सज्जनः को न दी-
नः ॥ (६)

சாந்தமும் கம்பீரமுமான திருமேனி; புன்சிரிப்புடன் ம்ருதுவான திருவாக்கு; தயையினாலே குளிர்ந்த கடாக்ஷம்; எல்லோருடைய க்ஷேமத்தையும் நாடி நின்ற நிலை; ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனிடத்தில் கண்ட இவையெல்லாம் திடீரென்று மறைந்துவிட்டதைக்கேட்டு உலகத்தில் வருத்தப்படாத ஸாது ஒருவருண்டோ?

लीलां ते भगवन्! नृसिंह! निपुणा
न ज्ञातुमेते वयं सर्वं त्व-
त्कृतमव्यये हितमतोऽनघ! त्वज्ज्ञ
शठशत्रुवर्य । ज्ञातं रङ्गशठारियोगिविग-
माद्यार्तिमेहि तद्विधं तद्व्रतमूर्य
वीरराघवशठारातिं प्रतिष्ठापनात् ॥

ஓ லக்ஷ்மீந்ருஸிம்ஹ! பகவன்! உனது லீலையை அறிய எங்களுக்குச் சக்தி இல்லை. நீ செய்வதெல்லாம் ஹிதமெனப்படுகிறது. ஆதலால் இப்போது ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனை இழந்ததால் உண்டான சோகத்தை விலக்கி அவரே போன்ற ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை அந்த ஸ்தாநத்தில் ப்ரதிஷ்டாபநம் பண்ணியருளியதினால் மகிழ்கின்றோம்.

ஸ்ரீ:

கொடிய விரஹம்

[ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி,
ந்யாயாத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

தாமரையில் தேனுண்டு கொண்டிருந்தது ஒரு வண்டு. மாலைஸூரியனும் மலைவாயில் மறைந்தான். மதுவுண்டு மதிமயங்கிக்கிடந்தமையால் இதொன்றையுமறிந்திலது அது. இயற்கையின் நியதிப்படி இதழ்கள் மூடிக்கொண்டன. வண்டும் மலர்ச்சிறையில் வைப்புண்டது. விடியும்வரை அவ்வண்டு இவ்வண்ணம் எண்ணமிடலாயிற்று:—

'ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம்' இன்பத்திற்கிடைச்சுவரான இரவு இறந்தால் தன்னடைவே ஆநந்தம் ஆவிர்ப்பவிக்கும். தமஸ்ஸூ போமாகில் தேஜஸ்ஸூவர ஆளிட்டழைக்க வேண்டுமா? ராத்ரிப்போது போமாகில் அருணோதயம் அணித்தேவருமன்றோ? 'பாஸ்வாநுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஸ்ரீ:' நெடுந்தூரம் சென்றிருந்த நாயகன் வந்து முன்னின்றால் நகைசெய்வாள் நாயகி. முப்பது நாழிகையாக மறைந்திருந்து சதிரவன் எதிரில் தோன்றினால் பங்கஜலக்ஷ்மியும் புன்னகை கொள்ளுவாள். அது ஸமயம் சிறையிலிருந்து விடுதலை கிடைக்கும். இம்மாதிரி அதன் சிந்தனை சென்றுகொண்டிருந்தது. 'இத்தம் விசிந்தயதி கோஶகதே த்விரேபே' கவி இங்கு மேல் நடந்ததை சொல்ல நினைத்துக் கூசி பரிதபிக்கிறான். 'ஹா ஹந்த ஹந்த' ஆ! அந்தோ! அந்தோ!! என்ன நடந்தது? 'நளிநீம் கஜ உஜ்ஜஹார' அத்தாமரைப்பூவிருந்த கொடியை ஓர் யானை பிடுங்கித் துகைத்தது. உள்ளிருந்த வண்டின் உண்மையான நிலை என்ன?

ஸ்ரீமத் பெரிய அழகியசிங்கர் மேலும் பல்லாண்டு எழுந்தருளியாய் இருக்கப்போகிறது. சதாபிஷேகோத்ஸவம் சிறப்பாய்க் கொண்டாடப்படும். *'ஸம்ஸ்காரக்ரமஸம்பந்நாமத்ருதாமவிலம்பிதாம்। உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹாரிணீம்॥' என்றபடியுள்ள ஸ்ரீ அழகியசிங்கருடைய சொற்சந்தங்களைச் சிரகாலம் ச்ரவணம் செய்யப்போகிறோம் என்றெல்லாம் அனைவரும் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தோம். அவ்வாசைகள் நடந்த மாசிமீ 19உ யன்று ஸ்ரீமத் பெரிய அழகியசிங்கரின் திருமேனியுடன் மறைந்து மண்ணாயின. எவ்விதம் நினைப்பினும் நெருப்பெனத் தஹிக்கும் இவ்விரஹ வேதனையை எது சொல்லி ஆற்றுவோம்? யாரிடம் சொல்லித் தீர்ப்போம்? எங்கு சென்று போக்குவோம்?

உலகில் ஒரு மனிதன் மற்றவர்களால் விரும்பப்படுவதற்கு அநேக காரணங்கள் உண்டென்

---

* ஸம்ஸ்காரக்ரமஸம்பந்நாம் - கொச்சை மொழியும் க்ராம்யபாஷையுமாய் அல்லாமல் இலக்கணத்திற்கு இணங்க திருவடி, பெருமாளிடம் பேசினார். அடைவு கெடவும் பரிமாறவில்லை. அத்ருதாம் - 'ஶீக்ரீ, கீதீ, ஶிர:கம்பீ, ததா லிகிதபாடக:' என்று சிக்ஷகர்கள் பேசும்பொழுது துரிதநடை கூடாதென்றனர். திருவடி வாக்யம் அக்குற்றமுமற்று விளங்கியது. அவிலம்பிதாம் - நாழிகைக்கொரு வார்த்தையாக நிறுத்தி நிறுத்திப் பேசியும் பயனில்லை. போதம் ஏற்படாதன்றோ? ஆக ஶாஸ்த்ரஜ்ஞர் சொல்லும் ஸந்நிதியும் இருந்தது. கல்யாணீம் - தோஷமற்று இருப்பதேயல்லாமல் சப்தார்த்தஸௌஷ்டவோபேதமாய் சுபகரமாயுமிருந்தது. இதின் கார்யத்தைச் சொல்லுகிறார் மேல் ஹ்ருதயஹாரிணீமிதி- தோஷமற்று குணமும் கொண்டிருந்ததால் மனத்தை ஊடுருவித்தொடும் வகையில் அமையப்பெற்றது.

ருல் அவற்றில் ஒன்றுகூட பிரிகதிர்ப்படாமே அவையெல்லாம் ஸ்ரீ பெரிய அழகியசிங்கரிடம் குடிகொண்டிருந்தன. முதலில் 'ஜாநேந விஷிநொ ஶ்ரீதா ஂவநி' என்னுமம்சத்தை ஆலோசிப்போம். பாமரரை தோல்புரையில் பட்டு வசீகரிக்கும் இந்தக் கொடைவண்மை குற்றமற்று இங்கு விளங்கிற்று. 'ஶூவுக்ஷாஷி வெஷீதஹூாணி ஶாஹாஷூதாவஶாநாக்ஷரெ வீஶெ கஸ்யவிஶாஸ்யகஸ்ய வடிநெ' என்றபடியல்ல ஸ்ரீமதழகியசிங்கரின்படி. 'ஶூவுக்ஷாஷி-கண்முடி 'வந்தவர்பாவர் என எனக்கு விளங்கவில்லை' என்பர் சிலர். அவர்களையே குணகோடியில் சேர்த்துக்கொள்ளலாம் இந்த முறட்டு தனிகனையபேக்ஷித்து. இவன் கண்ணைத் திறந்துவைத்தே வந்த யாசகனை வைது அனுப்புவன். வெஷீதஹூாணி - இவனுடைய வக்ரதைக்கு ஸூசகமாக புருவம் வெறித்துக் கொள்ளும். ஶாஹாஷூதாவஶாநாக்ஷரெ - வந்தவருக்கு வரையாதே தனம் வழங்காமையாகிலும் அவமானகரவாக்யங்களை அவனுக்குத் தோன்றினவளவு வாரி வழங்குவான். கவ ஶாநாக்ஷரெ - வாக்யத்தில் ஒவ்வொரு அக்ஷரமும் யாசகனின் மனம் கொதிக்குமளவு ரூக்ஷமாயிருக்கும். இம்மாதிரியே தனிகர்களின் இயல்பு அமையும். இதற்கு நேர் எதிர் திசையில் சென்றது ஸ்ரீ அழகியசிங்கர் வண்மை. வாய் திறந்து யாசிக்கவும் செய்யாதிருப்பினும் அவர்கள் வீடேறி ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹம் செல்லும். பாத்ரமாயுள்ளவர்களை 'உதாரஸ்வஷவவெதெ' என்றாப்போல் பாராட்டிப் போஷித்தருளும் நீர்மைக்கு நிகரேயில்லை.

ஜ்ஞாநஸம்பத்தில் வந்தவாறே ஸத்காவ்யாலாபம் முதல் வேதாந்தவிஜ்ஞாநம் வரையிலுள்ள ஒவ்வொரு விதமாகிய மேதாவிதங்களிலும் மற்றையோரை விஞ்சி நிற்கும் ஸ்ரீ அழகியசிங்கரின் யோக்யதாவிசேஷம் பண்டிதபாமரலோகத்தில் அவரவர்கட்கு எட்டினமட்டில் தெரிந்ததேயாகையால் அதை நாமிங்கு விளக்குவது அவ்வளவு அவச்யமன்று.

திருநாட்டிற்கு எழுந்தருளும் ஸமயத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்கு சித்தவ்ருத்தியிருந்தபடி அவச்யம் சொல்லவேண்டும். நாட்டு நடப்பைப்பற்றிய வார்த்தைகளையோ, தன் திருமேனி நோவைப்பற்றிய ப்ரஸங்கங்களையோ ஏற்று மறுமாற்றம் ஸாதிக்கும்நிலை நின்றுவிட்டது. அப்பொழுதும் 'பிணங்கியமரர்பிதற்றும் பிரானுடைய குணங்களையே பிதற்றிக் கொண்டாக வாயிற்றிருந்தது. ஸ்வஸ்தராய் எழுந்தருளியிருந்தகாலத்தே சுற்றுள்ள ஸ்ரீபாதத்துமுதலிகளிடம் 'கத்யங்கள் நமக்கு அந்திமகாலத்தில் ஸ்ம்ருதிகோசாரமாம்படி எம்பெருமானார் நமக்கு அநுக்ரஹிப்பர். அப்படியில்லையேல் நீங்கள் ஸ்மரிப்பியுங்கள்' என்று ஸாதித்திருந்ததுண்டு. இரண்டாம்பக்ஷத்திற்கு அவகாசலேசமுமில்லாதபடி கத்யங்கள் நடுவில் கொஞ்சம் விட்டுவிட்டு நினைவிற்குவந்து உச்சரிக்கப்பட்டவண்ண மிருந்தன. பக்கலிலிருந்தோர் கேட்டுப் பலவித உணர்ச்சிகளால் உந்தப்பட்டு கண்ணீர் உகுத்தபடியிருந்தனர். 'கவிஜெஜநதாநிநு, கஸதாநிநு, கயிஷ்கஷூக' 'கூவதவ!' என்ற அழைப்புகள், 'கிஶீட ஹாரகெயடிர' என்று துடங்கும் வாக்யம் இவைகளை அடிக்கடி வாய் வெருவியவண்ண மிருந்தது. ஆழ்வார் நோவுபட்டமையை நினைவூட்டுவனவாயிருந்தன. 'கநாயொவிதவிரெ ஷாஶெஷியொகஸாரண' என்று எம்பெருமானை ஒரு ஸமயம் விளித்தாயிற்று. ஸ்ரீமதழகியசிங்கருக்கும் மற்றுள்ள ப்ராக்ருதர்க்கும் வாசியறியாமல் ஸ்ரீ அழகியசிங்கரை திருமேனிநோயால் வருத்துகிற ஈச்வரன் உண்மையிலேயே அநாலோசிதவிசேஷனை அசேஷலோகசரண்யனே என அடியேனுள்பட எல்லோரும் நினைக்கும்படியாயிற்று. திருநாட்டுக்கெழுந்தருளும் நாட்காலைப்பொழுது புலருந்தறுவாயில் ப்ரணவத்தைத் க்ரமாத்ரமாக உச்சரித்து 'ஶாஶெகாஷிகாதஷிகுவஶிவய்ாக ரணாய வஶிகூஹீஷ' என்று உச்சரித்து அதில் 'வஶிகூஹீஷ' என்றதைப் பலகாலும்பகன்று.கஶூதஸாமராஜநிஷ்டே' என்று சொல்லி மேல் செல்லமாட்டாமல் நிற்கும்படியாயிருந்தது. பக்தர்களின் சித்தத்தை

உருக்கிக் கண்ணீராய் வார்த்தது.

இப்படியாக ஆளவந்தார் ஸ்தோத்ரம், பீஷ்மஸ்தவகபிலஸ்தவங்கள், ஸ்வாசார்யத்யாநச்லோகம், ‘சூழ்விசும்பணிமுகில்’ என்ற திருவாய்மொழி, உபநிஷத் இவைகளின் உச்சைரநுஸந்தானத்தோடு இரவின் அமைதியான காலவிசேஷத்தில் ஹார்த்தாநுச்ருஹீதாய் ரச்ம்யநுஸாரியாய் மூர்த்தன்யநாடியால் திருநாட்டிற்கெழுந்தருளினர். விண்ணுலகில் திருமாமணிமண்டபத்தின் மணிக்கதவுகள் மீண்டும் ஒருமுறை திறந்து கோவிந்தன் தமராகிய இவரை உள்ளே அழைத்துக்கொண்டன. வானுலகத்திலுண்டான கோலாகலத்வனியோவென பேரியும், தூரியமும், ஸ்ரீவீரராகவப் பெருமாள் ஸந்நிதிப் பெரியமணியும், அதிர்வெடிகளும் பேரிரைச்சலிட்டன. ஸ்ரீ அழகியசிங்கர் திருமுகமண்டலத்தில் அப்பொழுது ஒரு விலக்ஷணமான அமைதி குடிகொண்டிருந்தது.

நிற்க ஸ்ரீபாஷ்யகாரர் திருநாட்டுக்கெழுந்தருளினபோது முசித்துக்கிடந்த முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்யகாரரின் ஜ்ஞாநபுத்ரராய், த்ரமிடோபநிஷத்பாஷ்ய கர்த்தாவாய் எழுந்தருளியிருந்த திருக்குருகைப்பிரான்பிள்ளான் தஞ்சமானாற்போல், ஸர்வவித பாண்டித்யத்துடன் ஆசாராத்மகுணபூர்த்தியுள்ளவராய் வைராக்யநிதியாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் முதலிகளுக்குத் தஞ்சமாயிருப்பது மிகவும் ஆறுதலளிக்கிறது. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸகலலோக க்ஷேமங்களையும் அநுக்ரஹிப்பானாக.

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின்

பரமபதப்ராப்தி

[ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத்ராமாநுஜஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌம ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன், நிகழும் நந்தன ௵ மாசி ௴ 18௳ (1-3-53) ஞாயிற்றுக்கிழமை ராத்ரி (ப்ரதமை திதி உத்திரபல்குனி நக்ஷத்ரத்தில்) தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினர். ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யசேவதியாயெழுந்தருளியிருந்த நம் ஸ்ரீ அழகியசிங்கரது வியோகத்தால் ஸ்ரீவைஷ்ணவலோகம் சோகஸாகர நிமக்நமாயுள்ளது. ஸ்ரீ அழகியசிங்கர் தமது பூர்வாச்ரமத்தில், முத்திதரும்நகரேழில் முக்கியமாம் காஞ்சிமண்டலத்திற்கணித்தாய் ஸ்ரீ ஷஷ்டபராங்குச யதீந்த்ரமஹாதேசிகனால் ப்ரதிஷ்டாபிதமான “இஞ்சிமேடு” எனும் அக்ரஹாரத்தில், அம்ரவோரங் மாறும் வேதமோர் நான்குமோதி தமர்களில் தலைவராய சாதியந்தணர்குலத்தில் ‘ஜநிஷ்வாஹம் ஸம்பன்னே ஜோஷதி ஜமதிவ்யாத யஶஸா’ என்றபடி ‘எழாட்காலும் பழிப்பிலோம்’ என்கிற பரமைகாந்திகள் பாசுரத்திற்கு ப்ரதமோதாஹரணமாய், 34-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ‘ஸ்ரீசடகோபராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன்’ என்னும் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருவம்சத்தில், பாரத்வாஜ கோத்ரத்தில் ‘ஸ்ரீ. உப. ஆதிவராஹாசார்யர்’ என்னும் மஹானுக்குத் திருக்குமாரராய், பஹுதாந்ய ௵ தை ௴ உத்திராட நக்ஷத்ரத்தில் அவதரித்தருளினர். ஸ்ரீ ஸ்வாமி யதாகாலத்தில் ஜாதகர்மாதி உபநயநாந்த ஸம்ஸ்காரங்களைத் தமது பிதாவினிடம் பெற்று, வணக்கமொடுக்கம் வழக்கமொழுக்கம் முதலான குணக்குலங்களுடன் திருத்துழாய்க்கு மணம்போலவும், ரத்நத்துக்கு ஒளிபோல்வும் ஸஹஜஸித்தங்களாய்ப் பெற்று விளங்கிவந்தார். ஸ்ரீ ஸ்வாமி தமது ப்ரஹ்மசர்யாச்ரமத்தில் தம் பிதாவினி

டமே ஸ்வசாகாத்யயநத்தைப் பூர்த்திசெய்தருளி அநந்தரம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 35-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த 'ஸ்ரீரங்கநாதசடகோபயதீந்த்ரமஹாதேசிகன்' எனப்படும் ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கரால் பஞ்சஸம்ஸ்காரங்கள் அநுக்ரஹிக்கப் பெற்று, பூர்வமீமாம்ஸாதி சாஸ்த்ராப்யாஸம் செய்தருளும்பொருட்டு திருக்குடந்தையில் சதுச்சாஸ்த்ர வேத கல்பதரு என்று ஜகத்ப்ரஸித்தராய், ஸதாசாரஸம்பந்நராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. சேஷாசார்யஸ்வாமியினிடம் எழுந்தருளி, தர்க்கமீமாஸாதி சாஸ்த்ராப்யாஸம் செய்தருளி அதிசயித சாஸ்த்ரஜ்ஞாநத்தையுடையவராய் விளங்கிவந்தார்.

பிறகு க்ருஹஸ்ததர்மாசரணம் பண்ணவேணுமென்ற திருவுள்ளமுண்டாகி, ஸத்குலப்ரஸூதையான ஒரு கந்யகையை சாஸ்த்ரோக்தமாக விவாஹம் பண்ணிக்கொண்டு பஞ்சகாலபராயணராய் எழுந்தருளிவந்தார். இப்படியிருக்குங்காளில் தமது ஜ்ஞாநபரிபாகத்தின் முதிர்ச்சியாலும் ஸ்ரீ பகவத்கடாக்ஷத்தாலும் 'ஸுதீவவ்ருயதயாலுர்நர' என்று வடிவழகாந்தவரும், அநிதரஸாதாரண க்ஷமா குணநிதியும், ஸாதுதமரும், ஸ்வயம்வ்யக்தக்ஷேத்ரமெனப்படும் ஸ்ரீமுஷ்ணத்தில் எழுந்தருளியிருந்தவருமான ஸ்ரீ.உப.ஸ்வர்ணம்க்ருஷ்ணமாசார்யஸ்வாமியை ஆசார்யனாக வரித்து, அந்த மஹானிடமிருந்து ஸ்ரீபாஷ்யாதி வேதாந்தக்ரந்தங்களையும் செவிக்கினிய செஞ்சொல்லான த்ராவிட வேதங்களையும் அதிகரித்தருளினார். அந்த ஆசார்யனுடைய அநுக்ரஹ விசேஷத்தால் அந்தமஹானுடைய சரணகமலங்களில் மிகுந்த ஆஸக்திகொண்டு திருநாராயணன் திருவடிகளில் ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணம் செய்து க்ருதக்ருத்யராய் நிர்பரராய் எழுந்தருளியிருந்தார். தமது குடும்பஸ்திதியில் ஸ்ரீஸ்வாமி ஜ்ஞாநாநுஷ்டாநங்களிற்போலவே அதிரிக்தர். (மேம்பட்டவர்; மிகுந்த ஏழை.) எனினும்ஸ்ரீஸ்வாமி எப்போதும் தமது இன்சொற்களாலும் இன்முகத்தாலும் யாவரையும் மகிழ்வித்துக்கொண்டு 'ரூபேவ தாக்ஷிண்ய ஸம்பந்ந: ப்ரஸாதித:' என்றபடி அழகிய சாந்த ரூபத்துடன் யாவரிடத்தும் தாக்ஷிண்யமும் க்ருபையுமுடையவராய், தம்மையடுத்து ப்ரார்த்தித்தவர்களுக்கு காலக்ஷேபமுகத்தால் ஜ்ஞாநைச்வர்யத்தை உண்டாக்கிவந்தார். ஸ்ரீ ஸ்வாமி செய்தருளின உபந்யாஸங்களும் ப்ரவசநங்களும் கணக்கிலடங்கா. பால்யாத்ப்ரப்ருதி பூர்வஜந்மஸுக்ருத விசேஷத்தால் கோபம் என்பது லேசமும் ஸ்ரீ ஸ்வாமியினிடத்தில் இல்லையெனப் பெரியோர் கூறுவர்.

இப்படி திருக்கல்யாணகுணநிதியாய் வித்வந்மணியாய் எழுந்தருளியிருந்த நம் ஸ்ரீ ஸ்வாமியை, ஸ்ரீ மடத்தில் 41-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த காருக்குறிச்சி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநெல்வேலி ப்ராந்தத்தில் ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருந்த ஸமயத்தில் ஒரு சாதுர்மாஸ்யஸங்கல்பத்தில் தம்மிடமெழுந்தருளும்படி ஸ்ரீ ஸ்வாமிக்கு ஒரு ஸ்ரீமுகம் நியமித்தருள, ஸ்ரீ ஸ்வாமிக்கும் இந்த வ்யாஜத்தில் பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் தண்டன் ஸமர்ப்பிக்கவேணுமென்ற திருவுள்ள முண்டாகி அங்கெழுந்தருளி ஸ்ரீ அழகியசிங்கர்ஸந்நிதியில் தண்டன்ஸமர்ப்பித்து நின்றார். அப்போது ஸ்ரீ அழகியசிங்கர் ஏற்கெனவே ஸ்ரீ ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டாநவைராக்யங்களைக் கேள்வியுற்றிருந்தபடியால், அவற்றை ப்ரத்யக்ஷத்திற்கண்டருளிப் பேருவகந்து, 'தேவரீர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திவ்யாஸ்தாநத்தில் ஆஸ்தாநவித்வானாக இருக்கவேணும்' என்று நியமித்தருள, ஸ்ரீ ஸ்வாமியும், 'ஓம்' என்று அந்த மஹாதேசிகனுடைய நியமநத்தை சிரஸாவஹித்து அனேக ஸம்வத்ஸரங்கள் அநேக ஸச்சிஷ்யர்களுக்குச் சிந்தனாரூபமான காலக்ஷேபங்கள்ஸாதித்துக்கொண்டு மிகுந்த யசஸ்ஸுடன் மடத்தில் ஆஸ்தான வித்வானாக எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு ஸஞ்சாரத்தில் திருவுள்ளமுண்டாகி,அனேகதிவ்யதேசங்களை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டுவரும்போது திருமேனியில் தளர்ச்சியேற்படவே, தமதுவியோகம் திருவரங்கத்தில் ஸம்பவிக்கவேணுமென்ற திருவுள்ளமுடையவராய் ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளி, ஸ்ரீமடத்துநிர்வாஹங்களையெல்லாம் அங்குள்ள ஸ்ரீ தசாவதாரப்பெருமாள்ஸந்நிதியிலேயே நடத்திக்கொண்டு வந்தார். சின்னாட்சென்றதும் ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருமேனியில் மிகுதியும் தளர்ச்சி

யேற்படவே, தமக்குப்பின்னிட்டு இவ்வாஸ்தாநநிர்வாஹ விஷயத்தில் ஸ்ரீ ஸ்வாமியே தகுந்த அதிகாரியென்று தீர்மானித்து, சுக்ல ௵ சித்திரை ௴ 22௳ (4-5-1929) சனிக்கிழமை சாஸ்த்ரோக்த க்ரமமாக ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸந்யாஸத்தைச் செய்வித்து 42-வது பட்டத்தில் தமக்குப்பிறகு ஆஸ்தாந நிர்வாஹங்களைச் செய்துவரும்படி நியமித்தருளினார். இந்த அழகியசிங்கர் எழுந்தருளின வேளை அம்மஹாதேசிகனுக்குத் திருமேனி அநுகூலமாகிவிடவே, அன்றுமுதல் 12-வர்ஷ காலம் இரண்டு திருநாமங்களும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன்ஸந்நிதியில் அவனுடைய திருவாராதநம் முதலிய கைங்கர்யங்களை ஸுகமாய் நடத்திவந்தார்கள். பிறகு விஷு ௵ ஐப்பசி ௴ 9௳ ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநாட்டை அலங்கரிக்கவே, ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு ஸ்ரீமடத்தில் ஐப்பசி ௴ 18௳ திங்கட்கிழமையன்று 42-வது திவ்யாஸ்தாநத்தில் பட்டாபிஷேகமஹோத்ஸவம் நடைபெற்றது. அப்பட்டாபிஷேகஸமயத்தில் அளவிறந்த ஸ்ரீவைஷ்ணவர்கள்திரளில் சேதநோஜ்ஜீவனார்த்தம் சில பொன்மொழிகள் ஸ்ரீஅழகியசிங்கர் ஸாதிக்கும்படியிருந்தது. அவையாவன:— 1. நம் ஸம்ப்ரதாயஸ்தர்களான சிறுவர்களின் க்ஷேமத்தையுத்தேசித்து வேதபாடசாலையும் சாஸ்த்ரபாடசாலையும் ஸ்தாபித்தல். 2. வர்ஷத்திற்கொருமுறையேனும் வித்வத்ஸபை கூட்டி, அவர்களுடைய ஜ்ஞாநாபிவ்ருத்தியில் உத்ஸாஹத்தையுண்டுபண்ணுதல். $ 3 உத்தர தேசத்தில் அஹோபிலமடங்களை ஏற்படுத்துதல். §4. ருக்வேதிகளான ஸந்நிதிசிஷ்யர்களுக்கு அந்தசாகையின்படி ஆஹ்நிகங்களை எழுதி அச்சிட்டு ப்ரசுரம் செய்தல். 5. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யாநத்தை எழுதிமுடித்து முத்ரணம் செய்தல். 6. ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஆஸ்திகவ்ருத்தியையுத்தேசித்து 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்ற மாதப்பத்ரிகையை ஸ்ரீ ஸந்நிதியிலிருந்தே நடத்துதல். 7. பற்பலவிடங்களுக்கு வித்வான்களையனுப்பி ஆஸ்திக்யம் பரவுமாறு ப்ரவசநம்பண்ணச்செய்தல். இவ்வாறு சில பொன்மெழிகள் ஸாதிக்கும்படியிருந்தது. ஸ்ரீ அழகியசிங்கரது ஸங்கல்பத்தை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் புஷ்கலமாக நடத்திவருகிறான்; இனியும் இவையாவும் நிச்சேஷமாய் நடந்துவரும்படி ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அநுக்ரஹிக்கும்படி இருக்கும்.

இவை யாவும் ஒருபுறம் நிற்க ஸ்ரீஅழகியசிங்கரின் ஔதார்யகுணத்தைச் சொல்லாமலிருக்கமுடியவில்லை. பரமைகாந்திகள் செய்ய வேண்டிய பகவத்கைங்கர்யங்களுள் ப்ரதானமானது 'ஸ்ரீபாஷ்யத்தைப் படித்து ப்ரவசநம் செய்தல்' என்று அருளினார் ஸ்ரீபாஷ்யகாரர் தமது அந்திம தசையில். அந்தக்கைங்கர்யம் வரவர இக்காலத்தில் லோபமடைந்து வருவது கண்ட ஸ்ரீமதழகியசிங்கர் அப்படிப்பட்ட ஸ்ரீபாஷ்யாதிகாரிகளை நாநாதேசங்களின்று அவர்களுக்கு த்ரவ்யச்ரமமில்லாமல் வரவழைத்து ப்ரதிஸம்வத்ஸரமும் தை ௴ 10-நாட்கள் 'மாலோலவித்வத்ஸபை' யில் வேதாந்தார்த்த விசாரம் பண்ணும்படி நியமித்து, அவர்களுக்கு ம்ருஷ்டாந்ந போஜநத்தையும் செய்வித்து, ஸம்பாவனையும் மார்க்கச்செலவையும் அருளிவந்த இந்த மஹோபகாரம் ஈடுமெடுப்புமில்லாததன்றோ? ஸதஸ்ஸில் அந்வயித்த வித்வான்களுக்கு ஸம்பாவனை அருளுவது ஸஹஜம். கார்யாந்தர நிர்பந்தங்களால் ஸதஸ்ஸுக்கு எழுந்தருளக்கூடாதநிலையிலிருக்கும் வித்வான்களுக்கும் தபால்மூலமாக ஸம்பாவனை அனுப்பப்படுகிறதென்றால் ஸ்ரீ அழகியசிங்கரின் அந்த ஔதார்யகுணத்தை என்னெனப் பேசிப்புகழ்வது! இதுவரையில் யாரும் எந்தஸதஸ்ஸிலும் இந்த ஸ்ரீஅழகியசிங்கரைத் தவிர இம்மாதிரியான க்ருபையைக் காட்டியதேயில்லை என்று சொல்லலாம். இது உயர்வுநவிற்சி (அதிசயோக்தி) யன்று. வள்ளன்மையின் பெருமையைக்குறித்து ஸ்ரீமத்ராமாயணத்தில் கம்பர் அருளிய பாசுரமொன்று அடியேன் நினைவிற்கு வருகிறது.

$ பம்பாயில் ஸ்ரீ அஹோபிலமடம் கட்ட 'செம்பூர்' என்றவிடத்தில் 12–ஆயிரம் ரூபாய்க்கு மனை வாங்கியாகி, கட்டிடம் கட்ட ஏற்பாடாகியும் யிருக்கிறது.

§ ருக்வேத ஆஹ்நிகம் எழுதியாகி கைப்ரதியாயிருக்கிறது. இனி அச்சிடவேண்டும்.

'பரவலருங் கோடைக்கு நின்றன் பனிக்குடைக்
கும் பொறைக்குநேடும் பண்பு தோற்ற
கரவலருங் கற்பகமும் உடுபதியுங் கடலிடமுங்
களித்துவாழப்
புரவலர்தம் புரவலனே! பொய்ப்பகையே! மெய்க்
கணியே! புகழின் வாழ்வே!
இரவலரும் நல்லறமும் யானுமினி யென்பட
நீத் தேகினையே'

[கம்பராமாயணம், ஆரணியகாண்டம்,
சடாயுகாண்படலம், பாசுரம் 21]

[தண்டகாவனத்தில் ஸ்ரீ ராமலக்ஷ்மணர் ஜடாயுஸ்ஸைச் சந்தித்துத் தங்கள் வரலாற்றைக் கூறுகிறார்கள். வந்திருப்பவர் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனார்கள் எனவறிந்த ஜடாயு ராமபிரானை நோக்கி 'என் நண்பன் தசரதன் க்ஷேமமாயிருக்கிறானா?' என்று ப்ரச்னம்பண்ணுகிறார். அதற்கு ராமலக்ஷ்மணாள் 'எனது தந்தையார் ஸத்யத்தைப் பாதுகாத்தற்பொருட்டு ஸ்வர்கத்தையடைந்தார்' என்று சொன்னதும் ஜடாயு மூர்ச்சையடைந்து, பின் தெளிந்து ப்ரலாபிக்கிறார். அப் புலம்பற்பாசுரங்களில் முதலது இது.]

[இதன்பொருள்] அர்சர்க்கரசனே! பொய்ம்மைக்குப் பகைவனே! ஸத்யத்திற்கு ஆபரணமாயிருப்பவனே! கீர்த்திமூர்த்தியே! சொல்லுதற்கரியஉன் வள்ளற்றன்மைக்கும், குளிர்ச்சியுற்ற உன் ஒற்றை வெண்கொற்றக்குடைக்கும், உனது பொறுமைக்கும் தோல்வியுற்ற கற்பக வ்ருக்ஷமும் சந்த்ரனும் கடல்சூழ்ந்த பூமியும் ஸந்தோஷமாய் வாழும்படி, அனேக யாசகர்களும் நல்ல தர்மங்களும் நானும் என்ன துக்கத்தையனுபவிக்க எங்களை விட்டு நீ போனாய்? என்பதாம். அதாவது:—'தசரதா! நீ உயிரோடு வாழ்ந்திருந்தகாலம் வரை, கொடையிற்சிறந்த கற்பகமும் சைத்யம் வாய்ந்த மதியும் பொறுமையிற்சிறந்த பூமியும் தங்கள் குணங்கள் ஓங்காமலும் தாங்கள் இருந்தவிடம் தெரியாமலும் உன்குணங்களுக் கடங்கிப் பதுங்கிஇருந்தன. நீ ஸ்வர்கம் சென்றபிறகே இவைளுக்கு ப்ரகாசமேற்பட்டு இவை களித்து வாழ்ந்தன. ஆதலின் நண்ப! அத்தகைய உத்தமனான நீ உயிர் நீத்ததனால் இனி யாசகர்களின் கதி என்ன? என் கதிதான் என்ன? ராஜ்யத்தில் இனி அறந்தான் ஏது? என்று துக்கித்தாராம். இந்தப் பாசுரார்த்தங்கள்யாவும் ஸ்ரீ அழகியசிங்கர்க்கு அந்வர்த்தமாகப் பொருந்தும். இப்படிப்பட்ட உதாரகுணமும் பொறுமையும் வாய்ந்த ஸ்ரீ அழகியசிங்கர் பரமபதித்தது பண்டித பாமர ஸாமாந்யத்துக்கும் ஈடுசெய்யமுடியாத ஒரு நஷ்டமாகும். ஆனால்; தசரதருடைய வியோகாநந்தரம் பட்டத்துக்குவந்த ஸ்ரீராகவனுடைய ராஜ்யம் எத்தகைய உன்னத நிலையில் விளங்கிவந்ததோ, அதேபோல் 43-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஸாம்ராஜ்யமும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவருளால் அத்யுந்நதமாயும் புஷ்கலமாயும் விளங்குமென்பதற்கையமில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் பேருபகாரம்

[ஸ்ரீ.உப. தோட்டாலம், வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, வேதாந்தசிரோமணி, மதுராந்தகம்.]

'புராணந்யாயமீமாம்ஸா தர்மசாஸ்த்ராங்கமிச்ரிதா: | வேதா: ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தச ||' என்று இவை பதினான்கும் தர்மவித்யாஸ்தானங்கள் என்று பெயர் பெற்றிருக்கின்றன. நான்கு வேதங்கள்; ஆறு அங்கங்கள்; புராணந்யாய மீமாம்ஸா, தர்மசாஸ்த்ரம் என்று அவற்றின் உபகாரகங்கள் நான்கு; ஆக இவை பதினான்காம். இவற்றில் வேதம் ப்ரதானம்; அது ஸ்வதந்த்ரப்ரமாணமாய் தான் விதிக்கும் அர்த்தத்தை வேறு ப்ரமாணத்தின் அபேக்ஷையில்லாமல் சாஸனம் செய்ய ஸமர்த்தமான

படியால் ஶாஸ்த்ரம் என்று பெயர் பெற்றிருக்கின்றது. இவற்றின் பொருளை அறிய உபகாரகமானவை மற்ற பத்து வித்யாஸ்தானங்களும். இவற்றில் 'ஶிக்ஷா வ்யாகரணம் ச²ந்தோ³ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா² । கல்பஶ்சேதி ஷட³ங்கா³நி வேத³ஸ்யாஹுர்மநீஷிண: ॥' என்று இவையாறும் அங்கங்களென்று அவற்றின் உபயோகவிசேஷத்தை அநுஸரித்துப் பிரிக்கப்பட்டன. மற்ற புராண, ந்யாய, மீமாம்ஸை, தர்மஶாஸ்த்ரம் என்ற நான்கையும் வேதத்திற்கு உபகாரகங்கள் என்றும் பிரித்து பொதுவில் இப்பத்தும் வேதார்த்தத்தை நன்கு அறிய உபயோகமானவை என்று வைத்து இப்பத்துடன் ப்ரதானமான நான்கு வேதங்களையும் சேர்த்து இப்பதினான்கும் வித்யாஸ்தானங்களென்றும் தர்மஸ்தானங்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த வேதம் கர்மகாண்டம் என்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் இருவிதமாகப் பிரிந்து முறையே கர்மங்களின் ஸ்வரூபத்தையும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்குவிசதப்படுத்துகின்றன. ஆக இவ்வளவால் எளிதில் அறியக்கூடாத வேதார்த்தத்தை தெளிவுபடுத்துவதற்காக மற்ற பத்து வித்யாஸ்தானங்கள் ஏற்பட்டவையேயல்லாது அவை ஸ்வதந்த்ரங்களல்லவென்று தீர்ந்த பொருள்.

உண்மை இவ்வாறிருக்க எக்காலத்திலோ எக்காரணங்கொண்டோ சிலர் இவற்றை வேதத்துடன் ஸம்பந்தப்படுத்தாமல் தனித்தனி ஶாஸ்த்ரங்களாக கருதத்துடங்கினர்கள். அவ்வாறே அவைகளைக் கற்று ஸ்வதந்த்ரமாகவே உபயோகிக்கவும் துடங்கினர்கள். அவ்விதமே தங்கள் தங்கள் ஶாஸ்த்ரம் ஒன்றே பரம புருஷார்த்தமான மோக்ஷத்திற்கும் வழிகாட்டுவதாக எண்ணி அவற்றிலேயே தத்வஹித புருஷார்த்தங்களையும் வகுக்கத்துடங்கினர்கள். இக்காரணத்தால் தான் அந்த தத்வ, ஹித, புருஷார்த்தங்கள் பரஸ்பரவிருத்தங்களாயும் வேதவிருத்தங்களாயும் முடிந்தன. இவ்விதமே வேதாந்தார்த்தத்திலும் நிர்குணவாதம் முதலிய பல கலக்கங்களை உண்டாக்கினர்கள்.

இம்மாதிரி கலக்கங்களை அறவே முறியடித்து ஸமீசீனமான அர்த்தத்தை தெளிவித்து இந்த பதினான்கு வித்யாஸ்தானங்களும் ஸகல கர்மஸமாராத்யனான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தைத்தெரிவிக்கவே பரஸ்பரஸௌஹார்த்தத்துடன் ஏற்பட்டவையாகும் என்கிற உண்மைப்பொருளை நம் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர்களான ஸ்ரீமந்நாதமுநிகள், ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர்முதலிய அக்காலத்திய மஹான்கள் தங்கள் க்ரந்தங்களில் நன்கு நிரூபித்தும் பரமதங்களை முறியடித்தும் தங்கள் ஸம்ப்ரதாயத்தை அநுஷ்டாந பர்யந்தமாக ஸ்தாபித்துவந்திருக்கிறார்கள். இவர்களில் ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளிய உபகாரம் மஹத்தானது. இவ்வுபகாரம் இல்லையேல் இந்த பதினான்கு வித்யாஸ்தானங்கள் அவித்யாஸ்தானங்களாக முடிந்திருக்கும். இப்படி ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளிய உபகாராதிசயத்தை திருவுள்ளத்தில் கொண்டுதான் நம் ஸ்ரீதேசிகன் யதிராஜஸப்ததியில் 'ஜயதி ஸகலவித்³யா வாஹிநீ ஜந்மஶைல:' என்று ஸ்ரீபாஷ்யகாரரை கொண்டாடியருளினர். பிறர்களின் கலக்கத்தால் அவித்யாஸ்தானங்களாகத் தீர்ந்த வித்யாஸ்தானங்கள் அனைத்தும் நம் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸம்பந்தத்தால் நிறம்பெற்று விளங்கி வேதங்களுடன் ஏகரஸமாக இருந்து உபகாரகங்களாயின என்று இதன் கருத்து. ஸ்ரீபட்டரும் தம் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்—

> 'ஶிக்ஷாயாம் வர்ணஶிக்ஷா வத³ஸி யதி³ மதோ
> வ்யாக்ரியா நிர்வசோவாஹ்யா: ச²ந்த³ஶ்ச²ந்த³ஸ்து-
> தா வ்யாத³யதி ஸமயம் ஜ்யௌதிஷம்
> ரங்க³நாத² । கல்பஸ்த்வநுஷ்டா²நஸூக்தம் ஹ்யர்த²-
> விதமிதயோர் ந்யாயமீமாம்ஸயோ: ஸ்யா-
> த³யம் வ்யக்தி: புராணஸ்ம்ருதிஷு தத³நு-
> த்வாஸாம் விஶ்வந்தி வேதா³: ॥'
>
> (உத்தரசதகம் 18-வது ச்லோகம்)

என்கிற ச்லோகத்தால் இந்த வித்யாஸ்தானங்கள் பதினான்கும் ஒன்றோடொன்று பொருந்தி உபகாரகங்களாயிருக்கின்றன என்ற விஷயத்தை வெளியிட்டருளினர்.

இப்படி ஸ்ரீபாஷ்யகாரர் ஸமீசீனமான அர்த்தங்களை பலமுகமாக நிரூபித்து உபகரித்தருளியதால்தான் அவர் திருவடிகளில் ஆச்ரயித்த பிற்பட்டவர்கள் நல்ல ஸம்ப்ரதாயத்தைக் கைப்பிடித்து உஜ்ஜீவித்து க்ருதார்த்தரானார்கள். இவ்வாறே ஸ்ரீபாஷ்யகாரருடைய பரிச்ரமத்தின் பலமாக இவர் ஸம்ப்ரதாயமே மிக உத்தமமானதென்று தீர்ந்தபின் இவருக்கு முற்பட்டவர்களான ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீமந் நாதமுநி முதலியவர்களும் நல்ல ஸம்ப்ரதாயத்தைப் பரப்பியவர்களென்ற பெருமையைப் பெற்று விளங்கினார்கள். இவ்வர்த்தத்தை ஸ்ரீதேசிகன் ‘ப்ரத்யூஷ: ஸம்யமிநாம் ப்ரணதி ப்ரணயிநா தத்வதோ ஜ்ஞாதிநோயோ: ஸம்பந்தேந ஸமீக்ஷ்ய நவீநவாந் யத்ராஸ்மத்யா நந்நநாத்’ என்று ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடி ஸம்பந்தத்தால் பிற்பட்டவர்கள் பெருமை பெற்றதுபோல் முற்பட்டவர்களும் அவருடைய திருமுடிஸம்பந்தத்தால் பெருமை பெற்றவர்களானார்கள் என்று உத்கோஷித்திருக்கிறார்.

இவ்வாறாக நம் ஸ்ரீஸம்ப்ரதாயம் உத்தரோத்தரம் வளர்ந்துவந்தபோதிலும் கால வைஷம்யத்தால் வேதாந்த ஶாஸ்த்ரத்தின் ப்ரசாரம் குறைந்து தர்கவ்யாகரணம் முதலிய இதர ஶாஸ்த்ரங்களை வாசிப்பதையும் ப்ரவசனம் செய்வதையும் மாத்திரமே முக்யமாகக் கொள்ளப்பட்டு வேதாந்தம் மங்கிவருங்காலத்தில் நம் ஸ்ரீ அழகிய சிங்கராகிய (42-வது பட்டம்) ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அவதரித்து ஸமீசீன ஸம்ப்ரதாயார்த்தங்களை ப்ராசீனமுறைப்படி நன்கு கற்றறிந்து அவற்றை உலகத்தில் எப்படியாவது பரப்பவேண்டுமென்று வெகுகாலம் மனோரதித்திருக்குங்காலத்தில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனும் தம்முடைய ஸம்ப்ரதாயத்தை இம்மஹானைக்கொண்டு வளரும்படி செய்யத் திருவுள்ளம்பற்றி இவருக்கு ஸ்ரீ அஹோபில மடத்தின் ஆஸ்தான நிர்வாஹத்தை அநுக்ரஹித்தான். இவரும் மறுதினம் முதற்கொண்டே தாம் மனோரதித்த கார்யத்தை நன்கு செய்யத்துடங்கி ஸம்ப்ரதாயார்த்தங்களை எளிய நடையில் விவரிக்கும் ‘ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா’ என்ற ஒரு மாதப்பத்ரிகையை நடத்த ஏற்பாடு செய்யலானார். உடனுக ஸ்ரீ மதுராந்தகத்தில் வேதப்ரபந்த பாடசாலையை ஸ்தாபித்து தக்க வித்யார்த்திகளுக்குப் பூர்ணமாக வேதத்தையும் ப்ரபந்தத்தையும் அத்யயநம் செய்ய ஸௌகர்யம் செய்துவைத்தும் அந்த வேதத்தின் அர்த்தத்தை நன்கு அறிவதற்கு உபகாரமான துறையில் ஶாஸ்த்ரகலாசாலையொன்றை விஸ்தாரமானரீதியில் ஏற்படுத்தி வித்யார்த்திகளுக்கு தர்க்கவ்யாகரணம் முதலிய ஶாஸ்த்ரங்களை போதிக்கும்படி செய்தும் அந்த ஶாஸ்த்ராத்யயனம் முடிந்தவாறே அந்த ஶாஸ்த்ரார்த்தமெல்லாம் வேதாந்தோபயோகியாம்படி செய்து அவர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களையும் பகவத்விஷயக்ரந்தங்களையும் நன்கு போதித்தும் தம்முடைய ஆஸ்தான நிர்வாஹநாட்களை ஸபலமாக்கியருளினார். இப்படி செய்ததின்மூலம் எண்ணிறந்த வித்வான்கள் இப்பொழுது ஸதஸ்ஸுக்களில் நன்கு வாக்யார்த்தம் சொல்லக்கூடியவர்களாயும் ப்ரதிவாதிநிரஸனம் செய்யக்கூடியவர்களாயும் விளங்கிவருகிறார்கள். இதன்றிக்கே ஆஸ்தானநிர்வாஹத்திற்கு எழுந்தருளினவுடனே முதல்முதலாக ‘ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ்’ என்றஒரு ஸதஸ்ஸை ஏற்படுத்திபலவித்வான்களையும் வித்யார்த்திகளையும் வரவழைத்து தம் முன்பு வேதாந்த ஶாஸ்த்ரத்தில் விஷய விசாரம் செய்யும்படி நியமித்து அதைக் கேட்டு ஆநந்தித்து அவர்கள் மனோரதத்திற்கு அதிகமாகவே அவர்களுக்கு பஹுமானமும் செய்தும் இப்படி ப்ரதிவருஷமும்நடத்திக்கொண்டு ஸ்ரீ ஸம்ப்ரதாயத்தை வெகுவாக வளர்த்தருளினார். இம்மஹான் செய்தருளிய பல க்ரந்தங்கள் அவ்வப்போது நம் ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்ட கலக்கங்களைப் போக்கி தெளிவு பிறப்பிக்க உபகாரகங்களாயிருக்கின்றன. இப்படி வேதாந்தார்த்த ஸம்ரக்ஷணம் தம் காலத்தில் போல் பிற்காலத்திலும் விசேஷமாக நடக்க வேண்டுமெனத் திருவுள்ளம்பற்றி அதற்குத் தகுந்த மனஸ் கல்வித்திறமை ஊக்கம் முதலிய

பல நற்குணங்கள் பொருந்திய ஒரு மஹானை ஆஸ்தானநிர்வாஹத்திற்கு நியமித்து சிலகாலம் அவரைக்கொண்டே தாம் எண்ணிய கார்யங்களை நடத்திக்கொண்டு ஸந்தோஷத்துடன் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் திருவுள்ளமுகந்து இவருக்கு பரிபூர்ணமான விச்ராந்தியை அநுக்ரஹித்தருளினன்.

இதற்கு முன்பும் வெகு நாட்களாக இல்லாத இவ்வித மஹோபகாரங்களை நன்கு கவனிக்குங்கால் ஸ்ரீபாஷ்யகாரர் அக்காலத்தில் செய்தருளிய உபகாரங்களுக்கு ஸமானமாக இவை விளங்குவதன் மூலம் ஸ்ரீபாஷ்யகாரர் விஷயத்தில் ஸ்ரீதேசிகன் அநுஸந்தித்த விதத்தில் இவர் திருவடி ஸம்பந்தத்தால் பின்புள்ள பலர் பெருமை பெற்றதுபோல் இவருக்கு முன்புள்ள ஆசார்யர்களும் இவருடைய திருமுடிஸம்பந்தத்தால் பெருமைவாய்ந்தவர்களானர்கள் என்று சொல்வது மிகையாகாமல் உண்மையை உரைத்ததேயாகும் என்பது நம் துணிவு.

ஸ்ரீராமாநுஜவிஜ்ஞாநே ஸ்வாதந்த்ர்யேண ரக்ஷிதம் ஹ்ருதி ।
ஸ்ரீமத்ரங்கஸடாராதி யோகீந்த்ரம் ஸமாஶ்ரயே ॥

ஸ்ரீ:

அருளாள ப்ரேமா

[ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம், நரஸிம்ஹாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]

ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருதராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் பரமபதத்தில் நித்யஸூரிகளின் திருவோலக்கத்தை ஸமீபத்தில் அலங்கரித்தது அவர்களின் கோஷ்டியை நிறம்பெறச்செய்தது என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் இஹலோகத்தில் ஸ்ரீவைஷ்ணவத் திரளுக்கே நடுநாயகமாய் விளங்கிய இம்மஹாதேசிகனின் வியோகமானது மற்றென்றால் பரிஹரிக்கமுடியாதபடியான இழவாக நிற்கிறது என்பது திண்ணம்.

ஆசார்யச்ரேஷ்டர்களுக்குரிய ஜ்ஞாநம் அநுஷ்டாநம், ஆத்மகுணபூர்த்தி இவைகளெல்லாம் இந்த அழகியசிங்கரிடம் பொருந்தியிருந்ததென்றறுதியிடுவது மிகையாகாது. 'கற்க கசடற கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பது இந்த மஹாதேசிகனிடம் மிகவும் பொருந்தும். ஜ்ஞாநாநுஷ்டாநங்களால் ஓர் அஸாதாரணமான பாத்வம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் இருந்தாலும், தன் திறத்தில் வரும் ஸாமாந்யமானவர்களையும் புன்முறுவலோடு வரவேற்பதும் அவர்களை நல்வார்த்தைகளால் உபசரிப்பதும் மிகவும் அழகு. ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதார்யமானது ஸமீபத்தில் மாலோல ஸதஸ் நடவாதபோதுகூட பண்டிதர்களுக்கெல்லாம் ஸம்பாவனையைத் தாமே அனுப்பியதிலிருந்து நன்கு புலப்படும். ஸ்ரீ அழகியசிங்கர் நம் ஸித்தாந்த விஷயமாக பண்ணியிருக்கும் மஹோபகாரங்களும் பல உள. இவைகளைப்பற்றியெல்லாம் மஹநீயர்கள் அரும் பெரும் வ்யாஸங்கள் மூலம் வெளியிடுவார்கள் என்று எண்ணுகிறேன்.

இம்மஹான் பண்ணியிருக்கும் மஹோபகாரங்களுக்கு ப்ரத்யுபகாரமின்றி கையொழிந்தாலும் அடியேனின் ஸ்வரூபம் தந்யமாகும் பொருட்டு அடியேனுக்கு ஸுக்ருதவிசேஷத்தால் சில ஸமயம் ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயங்களை அருகேயிருந்து அநுபவிக்கும்படி ஏற்பட்ட ரீதிகளை விஜ்ஞாபிக்கிறேனிங்கு.

ஒரு ஸமயம் கோயிலுக்கு (ஸ்ரீரங்கத்திற்கு) அடியேன் போயிருந்தபோது காவேரியில் ஸ்நாநம்செய்து அரங்கநகரப்பன் திருப்பள்ளியுணரும்போது பரமபாவநமான அவனுடைய ப்ரதமகடாக்ஷத்திற்கு பாத்ரமாகவேண்டு

மென்கிற த்வரையாலே ஏகபுண்ட்ரத்தோடு நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு ஸன்னதிக்கு வேகமாகச்சென்று திருவரங்கச்செல்வனுரின் மதுரமாயும் சீதளமாயும் தயாதேவியால் வர்ஷிக்கப்பட்டதாயுமுள்ள திவ்யகடாக்ஷங்களால் சிறுச்சிறிதாக அநுக்ரஹிக்கப்பட்டு அப்படியே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் ப்ரதம நயநபாதத்திற்கும் ஆசைப்பட்டு தசாவதார ஸன்னதிக்கு விரைந்து என் சிங்கப்பிரானின் அருளையும் பெற்றேன். அங்கு அப்பொழுது தனியாக எழுந்தருளியிருந்த இந்த ஸ்ரீ அழகியசிங்கரைத் தெண்டன்ஸமர்ப்பித்தேன். ஸ்ரீ அழகியசிங்கரும் அடியேனைக் குளிரக்கடாக்ஷித்து ‘பேரருளாளன் திருவாராதனங்கள் குறைவற நடக்கிறதா? என்று விசாரித்தபடி. திவ்யதேசங்களிலிருந்து எழுந்தருளும் ஸ்ரீவைஷ்ணவர்களை முதன்முதலாவதாக ‘ஊரில் மழை உண்டா? எத்தனை மாதம் எரி பாயும்? என்றிப்புடைகளில் விசாரிக்காமல் அந்த திவ்யதேசத்தில் கோயில்கொண்டிருக்கும் எம்பெருமானின் நித்யோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்கள் க்ரமமாக நடைபெறுகின்றனவா என்று விசாரிப்பது பெரியோர்களின் மரபு. அதுவும் ஸ்ரீ அழகியசிங்கர் தாம் காதலித்து மணம் புரிந்துகொண்ட தம் ஆசை நாயகனுன அருளாளனின் யோகக்ஷேமத்தை அதுவும் அவனுடைய ஸேவையை இழந்து ‘மணவாளர் நம்மை வைத்த பரிசிது’ என்றிருக்கும் நிலையில் விசாரிப்பதில் என்ன வியப்பு. ‘அத்திகிரி அருளாளன் திருவாராதனங்கள் க்ரமமாக நடைபெறுகின்றன’ என்று விஜ்ஞாபித்தேன். பிறகு அடியேன் ஏகபுண்ட்ரத்துடனிருப்பதை கடாக்ஷித்து அழகாக அப்போது அடியேனை சிக்ஷித்தபடி. ஸந்யாஸிகளை ஸேவிக்கவரும்போது த்வாதச ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் போவது உசிதமல்லவென்று நியமித்து அங்கேயே த்வாதச புண்ட்ரங்களை இட்டுக்கொண்டு மறுபடியும் தெண்டன் ஸமர்ப்பிக்கும்படி நியமித்தாச்சுது. ‘கூவாரெ ஷூாவயதுவி’ ‘ஷாஷிதெ ஶாவிதாஙு’

என்பதும் எப்படி இங்கு அமைந்துள்ளது என்பது இதனுல் நன்கு ஏற்படுகிறது.

அர்ச்சாவதார ஸங்கமடியாக தேஹாவஸானத்தில் மோக்ஷத்தை கோருகிறோம் என்று நம் தூப்புல்பிள்ளையின் துணிபு. ஸ்ரீஸ்வாமிக்கு அர்ச்சாவதாரத்திலுள்ள ஊற்றம் அதிலும் கரைபுரண்ட கருணைக்கடலான பேரருளாளனிடத்தில் உள்ள அளவிறந்த காதல் மற்றொரு சந்தர்ப்பத்தில் வெளியாகியது. அழகியசிங்கர் திவ்யதேசயாத்ரையை திருவுள்ளம் பற்றி மாலோலனுடன் ஆங்காங்கு எழுந்தருளி சேதநர்களை உஜ்ஜீவிப்பித்துக்கொண்டுவருமளவில் கச்சிநகருக்கு எழுந்தருளும்போது முதலாவதாக கூரத்தாழ்வான் ஸன்னதியில் இறங்கியருளியாயிற்று. அவ்வமயம் ஸ்ரீ அய்யா ஸ்ரீ க்ருஷ்ணதாதாசாரியர் ஸ்வாமியுடன் அடியேனும் உபகாரங்களை எடுத்துக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பிக்கப் போனேன். ஸ்ரீ அழகியசிங்கர் அப்போது ‘ஜெநு ஹுாவார்ஜ தம் ஜெஶம் ஹாஆஜொ யஜெவீக’ என்கிற ச்லோகத்தை ஸாதித்து பரதாழ்வான் ‘ராஜநு’ என்று கைகேயினுல் ஸம்போதனம் பண்ணும்படியான பாக்யஹீனனை தனக்கு சக்ரவர்த்தித் திருமகன் எழுந்தருளியிருக்கும் தேசப்ராப்திகூட கிடைக்குமா என்று ஸந்தேஹித்த மாதிரி தமக்கு அருளாளனின் ஸேவை மறுபடியும் கிடைக்குமா என்று ஸந்தேகித்திருந்தேன். பாக்யவசத்தால்கிட்டப்பெற்றேன்’ என்று ஸாதித்தபடி. சக்ரவர்த்தித்திருமகனின் திருவடிகளை தன் சிரசில் தரிக்காவிடில் தமக்கு சாந்தி ஏற்படாதென்று பரதாழ்வான் கதறினுப்போல் பேரருளாளனின் திருவடிகளை தம் சிரஸில் தரியாவிடில் தமக்கு சாந்தி ஏற்படாதென்று ஸ்ரீ அழகியசிங்கரின் மனேபாவம். ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரமத்தில் பேருளாளனின் திருவோலக்கத்தை அலங்கரிக்காத நாளே கிடையாதென்னலாம். அப்போது அவ்வெம்பெருமானை தாம் அநுபவிப்பதும் அருகிலுள்ளோரை அநுபவிக்கச் செய்வதும் மிகவும் ஆச்சர்யம்.

மற்றொரு ஸமயம் அடியேனுக்கு ஓர் மஹத்தான பாக்யம் கிடைத்தது. ப்ரஹ்ம தேசம் என்னும் க்ராமத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் யாத்ரையில் ஒரு நாள் எழுந்தருளியிருந்த போது அங்கே ஒரு ஸ்வாமிக்கு உபாயாநுஷ்டாநம் நடைபெற்றது. அப்போது அடியேன் கூட இருந்து ஸ்ரீ அழகியசிங்கருக்கு கைங்கர்யம் பண்ணும்படியான பாக்யம் ஏற்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கர் மந்த்ரார்த்தங்களை அநுஸந்தானம் பண்ணும்போது ஏற்பட்ட ஸ்வரத்திலுள்ள ஓர் மாதுர்யத்தையும், தழதழப்பையும், இன்னிசையையும், கண்களில் நீர்த்துளிகளையும், திருமேனி பூராகவும் மயிர்க்கூச்சல் எறிவதையும் ஸேவித்தபோது ஸ்ரீ அழகியசிங்கரின் பக்திபாரவச்யமானது நன்கு தெரிந்தது. உள்கரைந்துருகிவரும் ச்லோகங்கள் அடியேனைப்போலுள்ள கடினமான ஹ்ருதயமுள்ளவர்களையும் உருக்கிவிட்டது அப்போது. பிராட்டியுடன் கூடிய ந்ருஸிம்ஹன் திருவடிகளில் ப்ரார்த்திக்கும்போது ஸாக்ஷாத்தாக மாலோலன் ஸ்ரீ அழகியசிங்கரிடம் பேசுகிறானோ என்று தோன்றிற்றேயொழிய அர்ச்சைஎன்பதே நினைவிற்கு வரவில்லை. அருகிலிருந்த அடியேனே மெய்மறந்திருந்தேன் அப்போதென்றால் ஸ்ரீ அழகியசிங்கர் எந்த ரீதியிலுள்ளார் என்பதை ஸ்வாமிகளே ஊஹித்துக்கொள்ளவேண்டும். பழம் முதலிய ஏதாவது ஸாமாந்யமான உபகாரத்தை தட்டோடு எடுத்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு ஸமர்ப்பிக்குங்கால் குறைந்தது 10 நிமிடமாகும் அந்தத் தட்டை கீழே வைக்க. தட்டோடு எடுத்து உள்ளன்போடு அவன் திருவடிகளில் இடும்போது தம்மையே மறந்து நிற்பர் ஸ்ரீ அழகியசிங்கர். இந்த ரீதியான அன்புக்கன்றோ அவன் தன்னை அறவிலை செய்து கொடுக்கிறான்.

ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியிடம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ரொம்பவும் விச்வாஸமுண்டு. ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி பரமபதித்துவிட்டார் என்று ஸ்ரீ அழகியசிங்கர் வந்தவாசி என்னும் நகரத்தில் எழுந்தருளியிருக்கும்போது திருச்செவிசாத்தியாயிற்று. அப்போது ஸ்ரீ ஸ்வாமியின் வியோகத்திற்காக மிகவும் விசனித்து 'ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டுபோனான்' என்கிற பாசுரத்தை அநுஸந்தானம்செய்து மருந்துக்கு ஒரு ஸ்வாமியை வைத்திருந்தேன் அதையும் ஸஹியாமல் எம்பெருமான் திருவுள்ளம் பற்றினான் என்று வாய் புலற்றியபடி ஸ்ரீ அழகியசிங்கர். அதே ரீதியாக ப்ராசீன ரீதியை அநுஸரித்துவந்த மஹாசார்யர்களில் சிறந்தவராக விளங்கிய மஹான் இந்த ஸ்ரீ அழகியசிங்கர். இவர் வியோகத்தைக் கேட்டு நாமும் 'ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால் தான் கொண்டுபோனான்' என்கிற பாசுரத்தையே அநுஸந்தித்து நிற்கவேண்டியிருக்கிறது.

ஸ்ரீ அழகியசிங்கர் பண்ணியிருக்கும் அநேக விதமான மஹோபகாரங்களில் தலைசிறந்து விளங்கும் உபகாரம் ஒன்று. 'சாயலோடு மணிமாமைதளர்ந்தேன்நான் இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே' என்கிறபடி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை தன் திருவாராதனத்திற்கு ஓர் ஸ்வாமியை தேட வைத்துவிடாமல் ஸ்ரீ அழகியசிங்கர் தமக்கு ஸர்வவிதங்களாலும் ஸத்ருசமாயும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனின் திருவாராதனமொன்றிலேயே பரமகுதூஹலத்தையுடையவராயும் ஜ்ஞாநாநுஷ்டாநவைராக்யநிதிகளில் பரிபூர்ணராயுமுள்ள மற்றொரு அழகியசிங்கரிடம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஒப்புவித்தமஹோபகாரத்திற்கு என்றும் இந்த ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் க்ருதஜ்ஞதாநுஸந்தானம் பண்ணவேண்டியது நமக்கு ஸ்வரூபப்ராப்தம்.

ஸ்ரீ:

ஒரு சிறுமாமனிசரின் மறைவு

[ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், சென்னை.]

ஸந்த்யோ ஸந்தாபஃ பங்கஜநிபிடைத-
ராஜீகேஶோபயோநாஃ க்ஷுத்ரக்ஷுத்ராநு-
ஷ்யநௌகாஸ்ஸைஃ விஹ்ருதா பாஷ்ப-
விந்தந்து । தந்யாஃ கேசித் வரத பவ-
த்ஸம்ஸ்தம் ஸந்துஷ்யந்தஃ ஸ்வாந்தைராஜ-
வ்யயநிஹதாஸ்ஸ்வாதயந்தே பதம் தே ॥

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் வரதராஜ பஞ்சாசத்தில் இந்த ச்லோகத்தில் சித்திரித்திருக்கும் அதிகாரிகள் வெகு ம்ருக்யமாக இருக்கும் இக்காலத்தில் தோன்றி ஸுமார் 75 ஸம்வத்ஸரங்கள் இந்நிலவுலகில் எழுந்தருளியிருந்து, அவற்றுள் குறைந்தபக்ஷம் 50 ஸம்வத்ஸரங்கள் 'ஸ்வாதயந்தே பதம் தே' என்ற கணக்கில்மந்தாதிகாரிகளும்கூட எம்பெருமான் திருவடிகளுக்கு ஆசைகூர்ந்து நிற்கும்வண்ணம் பேருதவி புரிந்த ஒரு பெரியார் இம்மண்ணகத்தை விட்டு வானகமே மிக விரும்பி எழுந்தருளிவிட்டார். அம்மஹாநுபாவரது திருவடிகளுக்கு ஆட்பட்டும் அன்புகூர்ந்தும் நிற்கும் பல்லாயிரவர் சோகஸாகரத்தில் ஆழ்ந்திருக்கின்றனர் இன்று. ஜ்ஞாந, வைராக்ய, அநுஷ்டாநங்களில் முதிர்ந்த பல மஹான்கள் நாம் செய்த தவப்பயனால் இன்றளவும் இந்நாட்டில் விளங்கிவருகிறார்கள். அவர்களுக்குள்ளும் சிலர்களுக்கே நம்மாழ்வார் நாதமுனி உள்ளிட்டார்க்கும் போலே பகவத்ஸாக்ஷாத்காராதிகளாகிற பலோத்கம பர்வங்கள் திகழக் காண்கிறோம். 'கேசித்' ஶப்தத்தையிட்டு இவ்வதிகாரிகளை ஸ்வாமி தேசிகன் நிர்த்தேசித்திருப்பதிலிருந்தே இந்த விஷயம் ஒருவாறு உணரப்படுகிறது. அந்த 'தந்யாஃ கேசித்' என்ற சிறுமாமனிசருள் ஒருவராகி விளங்கியவர் நம் பரமஹம்ஸேத்யாதி 42-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் என்பதை உணராதவரிருக்கமாட்டார்கள்.

பூர்வாச்ரமம்முதலே விலக்ஷணமான பகவதநுபவமும், ப்ரத்யுத அர்ச்சா திருமேனிகளில் ஊற்றமும் இவ்வாசாரியச்ரேஷ்டர்பால் காணப்பட்டன. காலக்ஷேபாதிகளிலும் உபந்யாஸங்களிலும் திருவுள்ளத்திலோடும் பகவத்ப்ரேமை கரைபுரண்டோடக் காணப்படும். பகவத்பரமான ச்லோகங்களையும் பாசுரங்களையும் அருளிச்செய்யும்போதே குரல் கத்கதமாகி, கண்கள் நீர் துளிக்க அநுபவமேலீடு வெளியாகும். அதிலும் வெகு மதுரமான திருக்கண்டத்தொலி. வெள்ளிமணி ஸேவித்தாற்போல் கேட்பவர்கள் செவிகளும் உள்ளங்களும் பரவசமாகும்படியான இனிமையான நாதம். ஸங்கீதத்தைத் தாம் பயிலாவிடினும் அருளிச்செய்யும்போது பாசுரங்களும் ச்லோகங்களும் ராகத்தோடேயே வெளிவரும். ஹ்ருதயத்தில் ஆழ்ந்து பதிந்துகிடக்கும் ராகத்தில் (ஆசையில்) மிகுந்த மஹாபுருஷன் திறந்து இந்த ராகங்கள் தாமாகவே சேருவது அதிசயமன்றே. உள்ளத்தில் ததும்பும் உணர்ச்சியும் அதனால் ஏற்படும் மெய்ப்பாடும் எதிர் நிற்பவர்களுக்குப் பரம ஆஹ்லாதத்தையும் மிகுந்த விச்வாஸத்தையும் விளைவிப்பன.

படிப்பு முதலியவைகளால் ஏற்படும் ஜ்ஞாநம் அநுபவபர்யந்தமாக ஏற்படவேண்டும் என்று எல்லோரும் சொல்லக்கேட்கிறோம். அப்படி அநுபவபர்யந்தமான ஜ்ஞாநம் ஏற்பட்டதையும் அவ்வநுபவம் உள்ளடங்காமல் தமது சொல்லினும் தொழிற்கணும் வெளிப்பட்டதையும், சில நாட்களுக்குமுன் பரமபதித்து நம்மையெல்லாம் சோகத்திலாழ்த்திவிட்ட ஸ்ரீ அழகியசிங்கரிடம் நிரம்பக் கண்டோம். நம் தௌர்ப்பாக்யத்தால் இன்னும் சில வருஷங்கள் அவற்றை நேரில்கண்டு இன்புறும் நிலையை இழந்து நிற்கிறோம்.

எம்பெருமானுடைய அர்ச்சா திருமேனிகளில் அதிமாத்ர ப்ராவண்யத்தோடு எழுந்தருளியிருந்தபடியால் ஸ்ரீ ஸ்வாமியின் ஸந்

நிதி மங்களாஶாஸனங்கள்வெகு விலக்ஷணமாக இருக்கும். வேதம் வல்லாரைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணியவேண்டுமென்று நமக்கெல்லாம் காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனெனில்—மைப்படி மேனியும் செந்தாமரைக்கண்ணும் வைதிகரே மெய்ப்படியாலுன் திருவடிசூடும் தகைமையினார்’ என்று நம்மாழ்வார் அறுதியிட்டுள்ளபடி அம்மஹாபுருஷர்களே திவ்யமங்கள விக்ரஹ விஷயத்தில் தாமும் ஈடுபட்டுப் பிறரையும் ஈடுபடுத்த வல்லமைவாய்ந்தவர்கள். ஸ்ரீமத் இஞ்சிமேட்டு அழகியசிங்கர் பகவத் ஸந்நிதியில் நின்றுகொண்டு திருக்கைகளைப் பாதி விரித்தும் பாதி கூப்பியும் வைத்துக்கொண்டு திருக்கண்களில் நீர்மல்க கத்கதமான குரலில் விஜயீபவ, விஜயீபவ, என்றும் பல்லாண்டு பல்லாண்டு என்றும் வாழ்த்தும்போதோ, அல்லது அர்த்தாநுஸந்தானத்தால் எற்பட்ட மெய்ப்பாட்டோடு ஜிதந்தாஸ்தோத்ரம், ஸ்தோத்திரரத்னம், கத்யம், தேசிக ஸ்தோத்திரங்கள், அருளிச்செயலிலிருந்து பாசுரங்கள், இவைகளை அநுஸந்திக்கும்போதோ ஸேவித்தால், ‘ஸூஹாஸ்யஸீத-நேத்ராஸ்வ ஸ்வஸ்ஸீக்ருதஸாத்வாநு ஸஹாவஸஸணாவிஷ: ஸ்ருஷ்டஸ்வஸ்வஹிஹெஹி-ஹி:’ என்கிறபடி எம்பெருமானைக்காட்டிலும் ஒருபடி அதிகமாக இவரே த்ருஷ்டவ்யர்—பார்க்கத்தகுந்தவர் — ஸேவிக்கவேண்டியவர் என்று எப்படிப்பட்டவர்களுக்கும் தோன்றாமல் போகாது.

க்ருஹஸ்தாச்ரமத்தில் எழுந்தருளி சிற்சிலருக்கே ஆசாரியராகயிருந்தகாலத்திலேயே ஸ்ரீ ஸ்வாமியினுடைய இந்தப்பெருமை பலரறியக்கிடந்தது. பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்தகாலமெல்லாம் காலக்ஷேபங்கள் கேட்டும் காலக்ஷேபங்கள் சொல்லியும் எத்தனை காலம் போக்கப்பட்டதோ அதற்குமேற்பட்ட காலம் அருளாளன் அர்ச்சா திருமேனியின் அநுபவத்திலும் அவ்வெம்பெருமான் கண்டருளும் அழகிய மஹோத்ஸவங்களில் அங்கயிப்பதிலுமே கழிந்திருக்கும் என்று தைர்யமாய்ச் சொல்லலாம். ஒரு ஸாதாரண பஞ்சபர்வப் புறப்பாட்டோடு பெரிய கருடோத்ஸவப் புறப்பாட்டோடு வாசியற எல்லாம் ஸ்ரீஸ்வாமி திருவுள்ளத்தைக் கொள்ளைகொண்டிருந்தன என்பது பின்னால் அவற்றை அநுபவிக்கமுடியாதபடி தூரதேசத்தில் எழுந்தருளியிருந்தபோது ஸாதிக்கும்படியிருந்த பல அருமையான வார்த்தைகளால் அனைவருமறியக்கிடந்தது. ஸ்ரீரங்கத்தில் சின்ன அழகியசிங்கராய் எழுந்தருளியிருக்கும்போது காஞ்சீமண்டலத்திலிருந்து யாரேனும் சென்று தண்டன் ஸமர்ப்பித்து நின்றால், ‘அருளாளன் திருவாராதனங்களும், மஹோத்ஸவங்களும் நன்றாக நடந்துவருகின்றனவா ‘ஸிதமுதித மநோபி: தாவகை: நித்யஸேவ்யாம்’ என்ற தேசிகன் மங்களாசாஸனப்படி பெரியார்களெல்லாம் எழுந்தருளி அநுபவிக்கிறார்களா, ஒரு ஏகாதசிப் புறப்பாட்டில் மஞ்சள் வெயிலோடு பேரருளாளன் புறப்பாடு கண்டருளும்போது இப்படியெல்லாம் அழகாக இருக்குமே என்று மெய்மறந்து ஸாதிக்கும்போது கேட்டால் மரங்களும் இரங்கும்; கற்களும் கனியும். இது வன்றோ பகவத்ப்ரேமை! அர்ச்சாவ்யாமோஹம்! ஸுமார் 12-வருஷகாலம் இழந்திருந்த அருளாளன் ஸேவையை மீண்டும் பெற்றபோது ஆவிஷ்கரிக்கப்பட்ட மனோபாவங்களை நேரில் அநுபவித்தபேர்களுக்கே அந்த திருவுள்ளத்தில் எப்போதும் ஓடிக்கொண்டிருந்த அருளாள ப்ரேமா ஒருபடி உணரப்பட்டிருக்கும். ‘பிரிந்தவர் கூடினால்’ என்ற தலைப்பில் ஒரு சிறு வ்யாஸம் வரைந்து அப்போதைய நிகழ்ச்சிகளை இந்தப் பத்திரிகையில் விஜ்ஞாபித்துக்கொண்டேன். மறுபடி அப் பெருமாள் ஸேவை ஸ்ரீ ஸ்வாமிக்கு நேராமலேயே போய்விட்டது. புகைப்படங்கள் மூலமாய் அந்தத் திருமேனியைப் பல திருக்கோலங்களிலே கொண்டு காட்டியபோது ஸ்ரீ ஸ்வாமி பட்டபாடுகளும், ஸாதித்த உக்திகளும் அப்போது அருகிருந்து காணும் பாக்யம் பெற்ற அடியோங்கள் உள்ளத்தைவிட்டெக்காலமும் அகலா.

ஸ்ரீமதழகியசிங்காாக அஹோபிலமட ஆஸ் தானத்தில் மூர்த்தாபிஷிக்தராகி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவாராதனத்தில் ஈடுபட்ட போது அர்ச்சையிலபிநிவேசம் இரட்டித்த தென்றே சொல்லவேண்டும். அந்தரங்கர் களுக்கு அவ்வப்போது அருளிச்செய்யும் வார்த்தைகளால் நன்றாக விளங்கியது அது. 'ந்ருஸிம்ஹ வர்த்யதே ஸதா த்வதந்திகே' என்றும் 'ந்ருஸிம்ஹ பச்யேமபரச்சதம் ஸமா:' என்றும் எப்போதும் ப்ரார்த்தித்தவண்ணம் இருப்பதாக ஸாதிக்கும்படியிருக்கும் பல ஸமயங்களில். 'கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அரெனின்' என்ற திருக்குறளின்ஸ்வாரஸ்யம் ஸ்ரீஸ்வாமியிடத்து வெகு அழகாக விளங்கியது. ஜ்ஞானம் கனிந்த நலம் வடிவெடுத்து நின்றது ஸ்ரீமத் இஞ்சி மேட்டு அழகியசிங்கர் திருவுருவில்.

கலங்காப்பெருநகராகியபரமபதத்தில் அந்த மில்பேரின்பத்து அடியரோடு இன்று ஒன் ருகிவிட்ட இம்மஹாபுருஷன் ஸ்ரீமதஹோ பிலமடத்தின் 42-வது பட்டத்தில் மூர்த்தாபி ஷிக்தராய் விளங்கிப் பல அரும்பெரும் காரி யங்களைச் செய்தருளியிருக்கிறார். அவற்று ளெல்லாம் தலைசிறந்து விளங்குவது தமக்குப் பின், இந்தப்பட்டத்துக்கு எல்லா அம்சங் களிலும் மிகப்பொருத்தமும் தகுதியுமுடைய ஒரு அழகியசிங்கரைத் தேர்ந்தெடுத்துத் தம் காலத்திலேயே அவருக்கு அப்பட்டத்தில் 43-வது அழகியசிங்காாக முடிசூட்டிவைத்த பெருமையே. இந்த இரண்டு ஸம்வத்ஸரங் களாக இரண்டு அழகியசிங்கர்களாக இவர்க ளிருவரும் எழுந்தருளியிருந்த ஒரு சீர்மை எங்கும் காணக்கிடைக்காது. இது லீலா விபூதியாகச்செய்தே அப்படிப்பட்ட நலங்க ளெல்லாம் நீடிக்கமாட்டாவாதலால் இந்த அத் புதச் சேர்த்தி பிரிக்கப்பட்டுவிட்டது. பெரிய அழகியசிங்கர் பரமபதித்தாலும் அவராலே ஸ்தாபிக்கப்பட்டு அவரது பூர்ண க்ருபாகடா க்ஷத்திற்குப் பாத்திரராக விளங்கும் நம் ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அப்பிரிவினால் ஏற்பட்ட சோகங்களையெல்லாம் நாம் மறக்கும்படி செய்து தமது ஜ்ஞான, அநுஷ்டான, வைராக்ய, பகவதநுபவ, ஸம்ப்ர தாய ரஹஸ்ய, வித்வத்ஜனபக்ஷபாதாதி பல வித கல்யாணகுணங்களால் ஆஸ்தானத்தை பல்லாண்டுகள் முன்னிலும் சீரிய வைபவத் துடன் அலங்கரித்து, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ னின் திவ்யகைங்கர்யங்களைப் பெருமையுடன் நடத்திவந்து, சிஷ்யகோடிகளையும், பொது வாக ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தையும் பாது காத்துவருவார் என்பதில் யாதொரு ஐயமு மில்லை. மிகப்பெருமையுடன் மாசி அவிட்ட நன்னாளில் நடந்தேறிய பட்டாபிஷேகமஹோத் ஸவத்தில் முக்கியமான அம்சம் ஸ்ரீ வீரராகவ னுடையவும் ஸ்ரீ கனகவல்லித்தாயாருடைய வும் இன்னருளுக்கு இலக்கானமையென்று சொன்னால், இதிலும் மேலான சுபஸூசகம் வேண்டுமோ, — ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் மஹிமைக்கும் பெருமைக்கும், ஸர்வதோமுக மான க்ஷேமத்தை அளிக்கவல்ல ஆட்சிகரும்.

ஸங்க்யாநாம் நசேத் யஸ்ய ஶ்ரவஸா ஶா-
ஸ்த்ரஸம்ரோத்தேஶ: கம் ந ஸ்வர-
த்தே ந யந்தநோத்தீர்ணம் வாஷாஹ-
நா । நித்யம் க்ஷுரணாரவிந்த யுக்ள-
ப்ராணாத்தாஸ்வாஸிநாம் ஸூக்த ஸாரஸீ-
ரஹாக்ஷ ஸதம் ஸந்த்ருதாம் ஜீவிதம் ॥

ஸ்ரீ:

நம் ஸ்ரீ அழகியசிங்கர்

[ஸ்ரீ. உப. பெருக்கரணை மாடபூசி, ஸாரஸாரஜ்ஞ, சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி, சிரோமணி.]

[illegible]

நம் ஸ்ரீ அழகியசிங்கரின் வைபவத்தை சிஷ்யஜனங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து சொல்வதும் சக்யமன்று. 'உதிக்ஷயாஹிவத-ஜெந மொவிநுஹணக்ஷயாக' என்பதுபோல் நம் புத்திமாந்த்யத்தை நினைத்து மௌனமாக இருப்பதுதான் நமக்கு யுக்தம். 'யதிமே ஸஹஸ்ரவதநாதிவைபவம் நிஜமர்ப்பயேத் ஸ கில ரங்கசந்த்ரமா: । அத சேஷவத் மம ச தத்வ தேவ வா ஸ்துதிசக்த்யபாவவிபவேபி பாகிதா' என்று ரங்கநாதன் விஷயத்தில் பட்டர் அநுஸந்தித்ததுபோல் நாமும் ஸாக்ஷாத் ரங்கநாதனான நம் அழகியசிங்கர் விஷயத்திலும் அநுஸந்தித்து க்ருதார்த்தராவது நலம். 'தர்மோ விக்ரஹவாநிவ' என்கிறபடி தர்மமேவடிவெடுத்தவதரித்திருக்கும் நம் ஸ்ரீ அழகியசிங்கரின் தர்மஸ்தாபனம் அந்திமகாலபர்யந்தம் விச்சின்னமில்லாமல் நடந்தது என்பதை எல்லோரும் அறிவர்கள். உபயவேதாந்தக்ரந்தகாலக்ஷேபம், மாலோலவித்வத்ஸபை, ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியை, கலாசாலை முதலான தர்மங்களை அநுஷ்டித்துப் போந்தார் என்பதை தனியாகச்சொல்லவேண்டாம்.

திருநாட்டுக்கு எழுந்தருளும் ஸமயத்திலும் ஒரு ஸூக்ஷ்மமான ஶாஸ்த்ரார்த்தத்தை விவரித்தார். ரவிவாரம் ராத்திரியில் திருநாட்டுக்கலங்கரித்ததுதான் அது. ப்ரஹ்மவித்துக்கள் ஸூர்யகிரணம் வழியாக ப்ரஹ்மலோகத்திற்குப் போகிறார்கள் என்று ஶாஸ்த்ரம் சொல்வதால் ராத்திரியில் ஸூர்யகிரணமில்லாததால் அவர்களுக்கு நிஶாமரணம் ப்ராசஸ்த்யாவஹமன்று என்று சங்கித்து ராத்திரியில் ஸூர்யகிரணம் உண்டென்று ஸ்தாபித்து ப்ரஹ்மவித்துக்களுக்கு நிஶாமரணம் தோஷாவஹமாகாது என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை நிஶாதிகரணத்தில் வ்யாஸர் வெளியிட்டுள்ளார். அந்த ஶாஸ்த்ரார்த்தத்தை நம் அழகியசிங்கர் நன்றாகக் காண்பித்தார். ரவிவாஸரத்தின் ராத்திரியிலன்றோ பரமபதமெழுந்தருளினது. ரவிஸம்பந்தம் இரவிலும் உண்டு என்பதைக் காட்டினதுபோலாயிற்று. இப்படி ஒவ்வொரு காலத்திலும் ஸூக்ஷ்மமான ஶாஸ்த்ரார்த்தங்களையுபதேசித்தும்ஸ்வயமநுஷ்டித்தும்போந்த ஆசார்யச்ரேஷ்டரான ஸ்ரீ அழகியசிங்கரின் ஸர்வலோகவிதிதமான மாஹாத்ம்யத்தைச் சொல்வது பிஷ்டபேஷணம்தான்.

'யம் யோகிந: ப்ராணவியோககாலே யத்நேந சித்தே விநிவேசயந்தி' என்று யோகிகளுக்கு அந்திமகாலத்தில் ப்ரயத்நஸாபேக்ஷமாக வரும் பகவத்விஷயகஸ்மரணம் யோகிச்ரேஷ்டரான நம் அழகியசிங்கருக்கு அதிஸுலபமாக உண்டாயிற்று. அகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாந 'அநாலோசிதவிசேஷாசேஷலோகசரண்ய' 'அநந்யஶரண: ஶரணமஹம் ப்ரபத்யே' 'பரிசர்யாகரணாய பரிக்ருஹ்ணீஷ்வ, பரிக்ருஹ்ணீஷ்வ, பரிக்ருஹ்ணீஷ்வ' என்பது முதலான கத்ய ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்த

வாறே எழுந்தருளியிருந்ததை அருகிலிருந்த அடியோங்கள் அநுபவித்தோம். [இங்கு 'புந: புந: யாசமாந:' என்பதைத் திருவுள்ளம்பற்றி 'ப்ரதிக்ருஹ்ணீஷ்வ' என்பதை அஸக்ருத் அருளிச்செய்தது.] அப்போதிருந்த ப்ரஹ்மாநந்தாநுபவம் தத்காலம் திருமேனியை ஸேவித்தவர்களுக்குப் புலப்படும். பீஷ்மஸ்தவம் ஸ்தோத்ரரத்நம் முதலான ஸத்ய: சித்தாஞ்ஜகதமமான ச்லோகங்களை ஸேவிக்கச்சொல்லியும் அதைக்கேட்டும் புளகாங்கிதகாத்ரராய் கத்கதஸ்வரராய் ஆநந்தபாஷ்பபரிபூர்ணநயநராய் எழுந்தருளி ஸேவை ஸாதித்தவிதமும் மிக விநோதகரம். அஸக்ருத் ப்ரணவோச்சாரணம் செய்ததை நோக்குங்கால் 'ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்மவ்யாஹரந்மாமநுஸ்மரந்' என்கிற கீதாவசநம் ஸ்ம்ருத்யாரூடமாகிறது.

இப்படி எழுந்தருளினகாலம்வரையில் தர்மஸ்தாபனங்களைச் செய்து குறைவு இல்லாதிருந்தபோதிலும் ஒரே ஒரு குறைவு உண்டு என்பதைப்பற்றி சோகிக்கிறோம். தாமெழுந்தருளியிருந்தே ஸ்ரீசின்ன அழகியசிங்கருக்கு பட்டாபிஷேகம்செய்து கண்குளிரக்கடாக்ஷிக்கவேண்டுமென்று மந:பூர்வமாக இருந்த ஆசை நடைபெறாமல் போனதுதான். இதை அநேகாவர்த்தி ஸாதித்ததும் உண்டு. இதற்குள் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநேக நித்யஸூரிகளால் உபசரிக்கப்பட்டும் அத்ருப்தனாய் நம் அழகியசிங்கருடைய பரிசர்யாம்ருதரஸாயனத்தைக் கொண்டே ஜீவிக்கவேண்டுமென்று எண்ணி பரமபதத்திற்கு ஸ்வீகரித்துவிட்டான். இந்த நந்தன வருஷம் உலகத்திலுள்ள ஜனங்களுக்கு ஆநந்தத்தைக் கொடாமல் எம்பெருமானுக்கு மாத்திரம் ஸந்தோஷத்தை விளைவித்துவிட்டது.

இப்படி ஜ்ஞாநாநுஷ்டானவைராக்யசாலியாயும் ம்ருதுஸ்வபாவராயும் வதாந்யராயுமுள்ள அழகியசிங்கர் ஆஸ்தானத்தில் அப்படிப்பட்ட வைபவமுள்ள நம் ஸ்ரீசின்ன அழகியசிங்கர் எழுந்தருளி அந்த ஆஸ்தானத்தை அலங்கரித்திருப்பதால் அந்த சோசநீயதசை நிவ்ருத்தமாயிற்று என்று மகிழ்கிறோம்.

दान्तिक्षान्त्यादिभूम्ना विख्यातो
यश्चाविर्भूतः श्रीमान् | रङ्गशौरिपद-
तिरावहूसाकं ज्ञानिवर्षिणतः ||
शोकस्य हेतुः निविड्वेगोऽ
हृद्व भव निवृत्तयिताव जातः |
सन्तावन्तात्ययतीह स्वयंः
तस्यादिव्योद्भवतः करोति ||

श्रीः

ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீ அழகியசிங்கரும்

[ஸ்ரீ. உப. நாவல்பாக்கம், யஜ்ஞவராஹ தாதாசார்யஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீபெரும்பூதூர்.]

ஸ்ரிய:பதியாயும் பரமகாருணிகனாயுமுள்ள ஸர்வேச்வரன் அஸ்மதாதிகளைப்போல உள்ள சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளங்கொண்டு நாலு வேதங்களும் ஒரு தட்டிலும் தானொருதட்டிலுமாக நிற்கிறதாயும் ப்ரபத்தி ப்ரதிபாதக ஶாஸ்த்ரமாயுள்ள ஸ்ரீமத்ராமாயணமென்ற ப்ரபந்தரத்நத்தை, வால்மீகி பகவானைக் கொண்டு ப்ரவ்ருத்திப்பித்தான். பிறகு கலியுகத்தில் ப்ரபந்நஸந்தானகூடஸ்தரான ஶடகோபனைக்கொண்டு ப்ரபத்திஶாஸ்த்ரத்தை ப்ரவ்ருத்திப்பித்து அதனாலே, லோக யோகக்ஷேமங்களை பகவான் நடத்தி வந்தான்.

இப்படி ஶடகோபன்மூலமாக யோகக்ஷேமங்கள் நடக்கப்போகிறது என்பதை ஸாவிதர்சியான பகவான் வால்மீகி ஸ்ரீமத்ராமாயணத்தில் 'कुशीलवाभ्यां वाल्मीकिः
हेमन्ते दिनेनेत्रे वनेऽधिवसन्नेव लोकस्य
योगक्षेमं विधास्यति ||' [அண்ணா பொன்

னால் அலங்கரிக்கப்பட்ட பாதுகைகளில் ஏறி அருளவேண்டும். இந்தப் பாதுகைகள் அல்லவோ எல்லாவுலகங்களுக்கும் யோக க்ஷேமத்தை செய்யப்போகின்றன] என்கிற ச்லோகத்தினால் ஸூசிப்பித்தான்.

இங்கு வியாஸ்யதஃ' என்பதிலுள்ள பவிஷ்யத்தை நோக்கினால் ராமபாதுகைகள் மட்டுமல்லாமல், பாதுகாஸ்தாநீயரான நம் சடகோபனாலும் ஸர்வலோகயோகக்ஷேமம் உண்டாகப்போகிறது என்பது தேறுகிறது. இவ்விடத்திலுள்ள யோகக்ஷேமபதங்களுக்கு ஸாமாந்யமாக 'அலப்தலாபோ யோகஃ' 'லப்தரக்ஷணம் க்ஷேமஃ' என்று அர்த்தமாய் இருந்தாலும், முமுக்ஷுவான நமக்கு கீதாபாஷ்யத்தின்படி பகவத்ப்ராப்திதான் யோகம்; பகவத்ஸ்தாநத்திலிருந்து அபுநராவ்ருத்திதான் க்ஷேமம் என்கிற அர்த்தந்தான் ஸ்வரஸம்.

இவ்விதமான யோகக்ஷேமங்கள் நம் சடகோபாதீநமென்பதும் மஹர்ஷியின் திருவுள்ளம்.

நம் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமதழகியசிங்கர்களுக்கு ஸ்ரீவண்சடகோபனென்கிற பிருதமும், திருநாமத்தோடு சடகோப பதச்சேர்க்கையும் இன்றளவும் ப்ரத்யக்ஷம்.

ஆகையால் வால்மீகி விவக்ஷிதமான ஜகத் யோகக்ஷேமங்கள் இந்த திவ்யஸ்தாநாபிஷிக்தர்களான ஸ்ரீமதழகியசிங்கர்கள் அதீநம் என்பது ஸ்பஷ்டம்.

அப்படிப்பட்ட இந்த திவ்யஸ்தாநத்திலே 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனுக்கும், ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்கும் சில ஒற்றுமைகள் அடியேன் மனத்தில் தோன்றின. அவற்றைக்கொண்டு பார்க்கும்போது ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ தேசிகனுடைய அபராவதாரம் என்ற உத்ப்ரேக்ஷை தோன்றுகிறது.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் பால்யத்திலேயே மாதுலரான அப்புள்ளாருடன் அம்மாளுடைய காலக்ஷேப கோஷ்டிக்கு எழுந்தருளியிருந்தபோது, அம்மாள் ஸ்வாமியை குளிரக் கடாக்ஷித்து 'ப்ராஸ்யஸே' (ஆமிவன்) என்று உகந்தருளி 'ப்ரதிஷ்டாபித வேதாந்தஃ ப்ரதிக்ஷிப்த பஹிர்மதஃ பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம்' [வேதாந்தத்தை நிலைநிறுத்தி வேறு மதங்களை ஜயித்து பெரியோர்களால் கொண்டாடப்பட்டு மிகுந்த மங்களத்தை அடைவாயாக] என்று அநுக்ரஹித்தார். இவ்விஷயத்தை ஸ்வாமி தேசிகனும் 'ஸ்ரீமத்ப்யாம் ப்ராஸ்யஸாவித்யநுபதி வயஸி வ்யாஹ்ருதாசீஸஹஸ்ராம் ஸம்ப்ரதாய லக்ஷ்யேஷு' என்று அதிகரண ஸாராவளியில் பெருமையாகப் பேசினார்.

நம் ஸ்ரீ அழகியசிங்கர் தனியனை நோக்கும் போதும் 'ஸ்ரீரங்கேச யதீந்த்ரேண கருணாபாத்ரீக்ருதஸ்ய ஸ்ரீநிதி யோகிநஃ' என்ற முதலடியிலுள்ள 'கருணா பாத்ர' என்ற பதரசனை இவரும் தம் ஆசார்யஸார்வபௌமரான ஸ்ரீ ரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகனால் (களத்தூர் ஸ்ரீ அழகியசிங்கர்) நன்கு அநுக்ரஹிக்கப்பட்டார் என்பது விளங்கும்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாஷ்யகாரரிடத்தில் நேரிடையாக ஆச்ரயிக்க முடியாமையாலே அக்குறை நீங்க ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில் ஸ்ரீபாஷ்யகாரரை குருவாகவும் தன்னை சிஷ்யராகவும் சித்தரித்ததாக ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் பணிப்பர்.

அங்கு குருவாக விளங்கும் எம்பெருமானார் அருளிச்செய்வதாக ஒரு ச்லோகமுண்டு. அதாவது-'ஸத்காரகீர்த்தி யசஸாம் அநபேக்ஷணேந ப்ருச்சாவிசேஷ பரயா கருணயா ப்ரவிசந்து ஸம்யக் அத்யாபனம் ஸுசரிதஸ்ய ஹி ஸாரிகோதிர்' [உபசரிப்பு, புகழ், பணம் இவற்றில் ஆசையில்லாமல் தக்கபடி கேட்பவர்களுக்கு மிகுந்தக்ருபையோடு விஷயங்களைச் சொல்லிக்கொடுத்தும் உடல்உள்ளவரை வேதாந்தப்ரவசனம்பண்ணக் கடவாய்]என்று. ஸ்வாமிதேசிகன் தான் எழுந்தருளியிருந்த காலத்தில் இந்த ஆசார்ய நிய

மநத்தைப் பூர்ணமாக அநுஷ்டித்துக் காட்டினார் என்பது ஸ்வாமியின் திவ்யஸூக்திகளாலே விளங்கும். 'யதிப்ரவர பாரதீ ரஸபரேண நீதம் வய:' [யதிராஜன் ஸூக்தி ரஸத்தின் பாரத்தினால் வயதானது போக்கடிக்கப்பட்டது] என்றும், 'நிர்விஷ்டம் யதிஸார்வபௌமவசஸாம் ஆவ்ருத்திபிர் யௌவநம்' [யதிராஜனுடைய ஸ்ரீஸூக்தியின் ஆவ்ருத்தியால் வாலிபப் பருவம் கழிந்தது] என்றும், 'த்ரிம்ஶத்வாரம் ஶ்ராவித ஶாரீரக பாஷ்ய:' [முப்பது தடவை ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் சொன்னவர்] என்றும் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யப்ரவசநத்தையே பொழுதுபோக்காகக் கொண்டார் என்பது ப்ரஸித்தம். நம் ஸ்ரீ அழகியசிங்கரும் 'ஜாநீதே நிதராமஸௌ குருகுலக்லிஷ்டோ முராரி: கவி:' என்கிறபடியே பல படிகளாலும் ஆசார்யசுச்ரூஷாதிகளாலே ஶாஸ்த்ரார்த்தக்ரஹணம்பண்ணி பூர்வாச்ரமத்திலும் துரீயாச்ரமத்திலும் 12-தடவைக்குக் குறையாமல் ஸ்ரீபாஷ்யப்ரவசநம் பண்ணியிருக்கிறார்.

ஸ்வாமி தேசிகன் 'வ்யுத்தாபித வேதாஸ:' என்கிறபடியே ந்யாயஸித்தாஞ்ஜந ந்யாயபரிசுத்தி தத்வமுக்தாகலாபாதிகரணஸாராவளி ஶததூஷண்யாதிக்ரந்தமுகத்தாலேயும் நேரிடையாக வாதிகளுடன் வாக்யார்த்தமுகத்தாலும் ஸ்வஸித்தாந்த ஸ்தாபநமும் பரபக்ஷ நிராகரணமும் பண்ணினார்.

நம் அழகியசிங்கரும் க்ரந்தமூலமாகவும் ஸ்ரீரங்கத்தில் காரைக்குரிச்சி ஸ்ரீ பெரிய அழகியசிங்கரோடு எழுந்தருளியிருந்தபோது மத்வ மடாதிபதிகளோடு ஆநந்த தாரதம்ய விஷயத்தில் வாக்யார்த்தம்பண்ணியும் திருவநந்தபுரம் முதலான மஹாஸபைகளில் அத்வைதிகளுடனும் வாக்யார்த்தம் சொல்லி வாதிகளை வென்றார். ஸந்தோஷார்த்தமாக ஸ்ரீபெரும்பூதூர் காஞ்சி முதலான திவ்ய தேசங்களில் உள்ள வித்வான்களோடு வாத ப்ரதிவாதம்பண்ணி நம் எம்பெருமானார் தர்சநத்தை ஸ்தாபநம்பண்ணி அம்மானுடைய ஸூக்திக்கு உத்தேச்யரானார்.

ஸ்வாமி தேசிகன் கடைசியாக ஸாதித்த க்ரந்தம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். நம் அழகியசிங்கரும் கடைசியாக ஸாதித்ததும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானமான ஸ்ரீ ஸார போதிநீ.

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஶாஸ்த்ரீயநியமநாதிகாரத்தில் ப்ரபந்நனுக்கு 5 கைங்கர்யங்களை அதிகாரிபேதேந விதித்தார். அதாவது.—(1) ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல். (2) அதுக்கு யோக்யதையில்லையாகில் அருளிச்செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல். (3) அதற்கும் யோக்யதையில்லையாகில் உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி திருவிளக்கு திருமாலைகளுண்டாக்குதல். (4) அதற்கும்யோக்யதையில்லையாகில் த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தானம் பண்ணுதல். (5) அதற்கும் யோக்யதையில்லையாகில் என்னுடையவன் என்று அபிமானிப்பானொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமாநத்திலேயொதுங்கி வர்த்தித்தல் செய்யலாம் என்பன.

அங்கு ஸ்வாமி அதிகாரிகளுக்குத் தக்கபடி கர்த்தவ்யவிபாகம் பண்ணினார். ஆனால் நம் அழகியசிங்கர் தாமொருவரே எல்லா கைங்கர்யங்களையும் செய்துபோந்தார். ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீபாஷ்யம் திருவாய்மொழி முதலிய அருளிச்செயல்களை அநேக ஸச்சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்து ப்ரவர்த்திப்பித்ததும், அன்றி ஸ்ரீபாஷ்யப்ரவசநம் லோகத்தில் மேன்மேலும் அபிவ்ருத்தமாக வேணும் என்ற திருவுள்ளத்தால் மாலோல வித்வத்ஸபையை ஏற்படுத்தித் தாமே உடனிருந்து வித்யார்த்திகளுக்கும் உற்சாகம் ஏற்படும்படி நடத்தியதும் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீபாஷ்யாபிருசிக்கு ஒருத்ருஷ்டாந்தமாகும். மூன்றாவதாகச் சொல்லப்பட்ட திவ்யதேச கைங்கர்யங்கள் அநேகம். ஸ்ரீ அழகியசிங்கரின் கைங்கர்யமாக திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியிலும் ஸ்ரீ காஞ்சீ தேவாதிராஜன் ஸந்நிதியிலும் ஸ்ரீ அஹோபிலம் முதலான பல இடங்களில் பல திருவாபரணங்களும் பீதாம

பாங்களும், வாஹன ஆஸநாதிகளும் செய்யப் பட்டன.

நான்காவதான த்வயார்த்தாநுஸந்தாநம் ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலேபோல மற்ற இடங்களிலும் நேர்ந்திருக்குமா என்பது ஸந்தேஹமே. ஸ்ரீ அழகியசிங்கர் நிர்யாணகாலத்திற்கு முன்னெல்லாம் மற்ற லௌகிக ஜ்ஞாபகம் இல்லாதபோதும் த்வயார்த்தவிவரணமான ஶரணாகதிகத்யத்தை அநுஸந்தித்துக்கொண்டு இருந்தார் என்பது ப்ரத்யக்ஷாநுபவம்.

கடைசி கைங்கர்யமாக விதிக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவஸமாச்ரயணமும் நம் அழகிய சிங்கர் பக்கலிலே பரிபூர்ணமாயிருந்தது. பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமி திருவடிவாரத்திலும் துரீயாச்ரமத்தில் காரைக்குரிச்சி ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிவாரத்திலேயும் சிரகாலவாஸம் பண்ணியிருந்தார். ஆகையால் ஶாஸ்த்ரீயநியமநாதிகாரத்தில் உடையவரின் நியமன வாக்கியங்களாகச் சொன்ன ஸர்வ கைங்கர்யங்களையும் பரிபூர்ணமாகத் தலைக்கட்டியவர் நம் ஸ்ரீ அழகிய சிங்கரே.

ஆகையால் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாஷ்யகாரர் நியமனத்தை எப்படித் தலைக்கட்டினாரோ அப்படி நம் அழகியசிங்கரும் எம்பெருமானார் நியமனத்தை சிரஸாவஹித்துத் தலைக்கட்டியபடியால் நம் அழகியசிங்கர் தேசிகாவதாரமென்பதற்கு ஸந்தேஹமில்லை.

ஸ்வாமி தேசிகன் உஞ்சவ்ருத்திசெய்து கொண்டு எழுந்தருளியிருப்பதை அறிந்த வித்யாரண்யர் ராஜஸபையிலே ஸன்மானம் பண்ணிவைப்பதாக எழுத, ஸ்வாமியும் பதிலாக வைராக்யபஞ்சகத்தை எழுதி '[illegible]' என்கிற பதிலெழுதி விரக்தாக்ரேஸராய் எழுந்தருளியிருந்ததுபோல நம் ஸ்ரீ அழகியசிங்கரும் திருவனந்தபுரம் கலாசாலை முதலான ஸ்தலங்களிலிருந்துவந்த அத்யாபகபதவி ஆஹ்வாநத்தைவெறுத்து உஞ்சவ்ருத்தியையே ஆச்ரயித்து பூர்வாச்ரமத்தில் எழுந்தருளியிருந்தார்.

இப்படி நம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் முக்யமான சில குணத்தின் ஸாம்யத்தை ஒத்திட்டுப் பார்த்தால், நம் அழகிய சிங்கர் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் அபராவதாரமென்பது ஸத்யமாக விளங்கும்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ காஞ்சியில் தூப்புல் அக்ரஹாரத்தில் அவதரித்து, திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் சிரகாலவாஸம்செய்து பிறகு ஸ்ரீரங்கத்தில் அநேககாலம் எழுந்தருளியிருந்தார்.

நம் அழகியசிங்கரும் தொண்டமண்டலமென்றும் காஞ்சீ மண்டலத்திலே இஞ்ஜிமேடு (காஞ்சிக்கு ஸமீபம்) என்னும் அக்ரஹாரத்திலே அவதரித்து, திருவேங்கடத்திலே கொஞ்சகாலம் வஸித்து ஶாஸ்த்ரார்த்த க்ரஹணம்பண்ணி, பிறகு ரங்கபூரஸிகன் திருவடிவாரத்தில் துரீயாச்ரமஸ்வீகாரம்பண்ணிக்கொண்டு அங்கு கொஞ்சகாலம் எழுந்தருளியிருந்தபடியால் '[illegible]' என்கிற ச்லோகத்துக்கு ஸ்வாமி தேசிகன்போல் ஸ்ரீ அழகியசிங்கரும் உத்தேச்யரானார். இவ்வர்த்தத்தையே ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருந்தபோது மத்வ ஸ்வாமியுடன் வாக்யார்த்தம்செய்து ஜயத்தையடைந்து திரும்புங்காலத்தில் ஸ்ரீ. உப. வித்வத் ஸார்வபௌமராய் விளங்கிய ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி அருளிச்செய்ததாக தாஸனுக்குக் கேள்வி.

இப்படிப்பட்ட நம் அழகியசிங்கர் பரமபதித்தது நம்போன்ற ப்ராக்ருதபக்தர்களுக்கு விசனமாகவே இருக்கும். ஆனால் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்தாபித்துள்ள ஸ்ரீ மாலோல வித்வத் ஸபையும், மதுராந்தகத்திலே விளங்குகிற ஸம்ஸ்க்ருத கலாசாலையும் ஸ்வாமி அநுக்ரஹித்த க்ரந்தங்களும், திவ்யதேசங்களிலே செய்தருளின கைங்கர்யங்களும் நமக்கு யச:

காயரான ஸ்ரீ அழகியசிங்கரை என்றென்றும் நினைவூட்டும் என்பது திண்ணம்.

இப்படி தேசிகனுக்குப் பிறகு ஸ்வாமி தேசிகனின் பரமபக்தராயும் ஸச்சிஷ்யராயுமுள்ள ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரமஹாதேசிகனும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளத்தை அப்படியே நடத்தி எம்பெருமானார் தர்சநத்தைத் தழைத்தோங்கச் செய்ததுபோல அபரதேசிகாவதாரரான நம் ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்குப் பிறகு ஸர்வவிஷயத்திலும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரமஹாதேசிகனை ஒத்தநம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோபயதீந்த்ரமஹாதேசிகனும் நம் சடகோபனது ஸம்ப்ரதாயத்தை வ்ருத்திசெய்தருளவேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீபெரிய அழகியசிங்கர் சரமதசை

[ஸ்ரீ. உப. வித்வான், முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, உபாத்யக்ஷர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

இப்பவும் நம் அழகியசிங்கர் அவதரித்தது முதல் கடைசிகாலபர்யந்தம் செய்த நல்ல கார்யங்களைப்பற்றியும் ஆத்மகுணங்களைப்பற்றியும் திருமேனிசோபை முதலானதுகளைப்பற்றியும் ‘யதோ வாசோ நிவர்த்தந்தே’ என்கிறபடி வேதத்தினாலேயும் உள்ளபடி எடுத்துக்கூறுவதற்கு முடியாமல்போனாலும், ‘போற்றி யுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே’ என்கிற ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் ஸ்ரீஸூக்திப்படி நம் அழகியசிங்கர் திருவடிகளில் பக்தியுள்ள அனைவர்களும் அவரவர்கள் சக்திக்குத்தகுந்தமாதிரி பலதடவை எடுத்துக் கூறியுள்ளார்கள். இப்பொழுதும் சில பக்தர்கள் இந்த சரமதசையின் வரலாற்றைப்பற்றியும் கீழ் கூறியபடி தங்களுக்கு ஸ்வரூபப்ராப்தம் என்று கருதி எடுத்துரைப்பார்கள். அது திண்ணம். ஆகையால் அக்ஷராப்யாஸம் முதற்கொண்டு ஆத்மகார்யபர்யந்தமும் திருமேனி ஸம்பந்தமான கைங்கர்யமும் மற்றும் சில கைங்கர்யமும் அந்த மஹானிடத்தில் அடியேனுக்கு ப்ராப்தமானபடியால், இப்பொழுது அந்த மஹான்விஷயமாக எடுத்துரைக்கப்போகிற பாகவதர்களுடன் சேர்ந்து எடுத்துரைப்பது கீழ்கூறியபடிக்கு அடியேனுக்கு மிகவும் ஸ்வரூபப்ராப்தமானபடியால் யதாசக்தி எடுத்துரைக்கலானேன்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு கொஞ்சம் திருமேனியில் அசக்தி ஏற்பட்டவுடன் ஸ்ரீந்ருஸிம்ஹாராதனம் ஒருவித அபசாரமுமில்லாமல் நடக்கவேண்டுமென்று உத்தேசித்தும் அந்த ந்ருஸிம்ஹனுடைய கைங்கர்யகோடியில் சேர்ந்த ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் முதலானதிற்கும் ஒருவித பாதகமும் வராமலிருப்பதற்கும் இந்த கார்யங்களை நன்றாக அநுஷ்டிக்கத்தகுந்தவராயும் லௌகிகவைதிகர் உள்பட யாவரும் அப்யுபகமம் பண்ணக்கூடிய ஒருமஹானை ஆஸ்தானத்தில் எழுந்தருளப்பண்ணினதினாலேயே நம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸ்ரீந்ருஸிம்ஹரூபியான பகவானிடத்திலும் அவனுடைய கைங்கர்யங்களிலும் எவ்வளவு பக்தி என்பதும் சிஷ்யர்களிடத்திலும் ஒரு க்ருபாவிசேஷமும் ஸர்வலோகப்ரஸித்தமானதே. தத்காலம் திருமேனிக்கு அசக்தி ஏற்பட்டு பரமபதம் எழுந்தருளுகிற பர்யந்தம் அடியேன் ப்ராயிகமாக கூடவேயிருந்தபடியால் கீழ் கூறிய கார்யங்களில் அந்த மஹானுக்கு யிருந்த பக்தியை அடியேனுடைய சிறிய புத்திக்கு எட்டியவரை நிரூபித்து இந்த கைங்கர்யத்தை முடித்துக்கொள்கிறேன். திருமேனிக்கு அசக்தி ஏற்பட்டவுடன் எல்லாகார்யங்களையும் தாம்முந்தி மனோரதித்து எழுந்தருளப்பண்ணின ஸ்ரீசின்ன

அழகியசிங்கரிடம் நடத்திக்கொண்டுவரும்படி நியமித்து நம்மிருவருக்கும் சரீரம் வேறேதவிர ஆத்மா ஒன்றே என்றும் ஸாதித்தவிட்டுத் தாம் மனோரதித்தபடி ஸ்ரீசின்ன அழகியசிங்கர் நடத்திவருகிற சார்யங்களைப் பார்த்து நம் க்ருஷி பலித்தது என்று மிகவும் ஆநந்தத்துடன் எழுந்தருளியாயிருந்தது. பிறகு தம்மால் மதுராந்தகத்தில் ஏற்படுத்தப்பட்ட கலாசாலையில் தர்க்க வ்யாகரண சிரோமணிகளில் உத்தீர்ணர்களாயும், தன்னிடத்தில் காலக்ஷேபம் செய்தவர்களுமான வித்யார்த்திகளுடனும், தம் கைங்கர்யபரர்களுடனும் பகவத்விஷயமான அநேகச்லோகங்கள் கத்யங்கள் இவைகளை மிகவும் ஆநந்தத்துடன் ஸாதித்துக்கொண்டும் 'ஸ்ரீசின்ன அழகியசிங்கருடன் மூன்று காலங்களிலும் இப்பொழுது இங்கு எல்லாகார்யங்களையும் நடத்திக்கொண்டுபோகிற ரீதியைப் பார்த்தால் எனக்கு இருக்கிற ஸந்தோஷத்தைச்சொல்லமுடியாது' என்று ஸாதித்துக்கொண்டெழுந்தருளியாயிருந்தது. பிறகு 'ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா' என்கிற உபநிஷத்வாக்யப்படி நித்யாநந்தப்ராப்திக்கு நாலுநாள் முந்தி தனக்கு நல்ல ஜ்ஞாபகமிருந்தும் கீழ்சொன்னவர்களுடன்கூட அதிகம் வார்த்தை ஸாதிக்காமலும் ஸ்ரீவைகுண்டகத்யம் ஶரணாகதிகத்யம் ஆளவந்தார் ஸ்தோத்ரம் பீஷ்மஸ்தவம் ஸ்ரீகீதையின்படி ப்ரணவம் இதுகளைத் தவிர்த்து வேறு ஒன்றையும் ஸாதிக்காமலும் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியாயிற்று. பிறகு ஸ்ரீவீரராகவன் மர்யாதையெல்லாம் வந்து மேல்நடந்த வைபவங்களைப்பற்றி பத்ரிகையில் எழுதிமுடியாது. நேரில் அநுபவித்தவர்களுக்கே அது அறியத்தக்கது. பரமக்ருபாவானனபடியால் தான் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளின பிறகும் கீழ்கூறிய காரணங்களினால் இப்படிப் பட்டபெருமை வாய்ந்த ஒரு மஹானை நாமெல்லோரும் இழந்துவிட்டோமென்கிற வருத்தமுண்டாகக்கூடாது என்கிற அபிப்ராயத்தினால் ஸ்ரீசின்ன அழகியசிங்கரை ஆஸ்தானத்தில் எழுந்தருளப்பண்ணியாயிற்றுபோலும்.

ஸ்ரீ:

அபிக்யா வைபவம்

[ஸ்ரீ. உப. அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஹெ௦ஜ ஶகூஂ நாரஹாரிவிஹொஹ-ிவ்ருகெ
வாஜவஜெ யொமீ நித்ய௦ ஶுணிஹித
ஊநா ரஜூகாய-ிாதூஜொ யஃ। வெஜாஹா
ய-ிவ்ருகூட நக்ஷூதெ ஸ்ரீ நருஸி௦ஹவி
யாவர௦ வகெ௲ ஷொzயா ஶாஜநு
.நாதா௦ வதிகா௦ யாஊ விஷொஃ॥

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை பலமுகமாக வ்ருத்திசெய்யத் திருவுள்ளம்பற்றி 'ஸாக்ஷாநாராயணொ தெவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும்' என்கிறபடி தானே நாயகாசார்யாதிகளாக அவதரித்து வ்ருத்திசெய்தானென்பது ஸுப்ரஸித்தம். திருமங்கைமன்னனால் மங்களாசாஸநம் செய்யப்பட்ட சிங்கவேழ்குன்றமென்ற திவ்யதேசத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸ்ரீஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனுக அனுப்ரவேசாவதாரம் செய்ததுமுதல் அவிச்சிந்நமாய் வளர்ந்துவந்தார். பிறகு 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகனுய் அநுப்ரவேசாவதாரம் செய்து, தனதபீப்ஸிதங்களை நிறைவேற்றிக்கொண்டான் என்பது ஶாஸ்த்ரஜ்ஞர்களின் அபிப்ராயம்.

'ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம்' என்கிற

படியே எப்பொழுதும் அநுஸந்திக்கத்தக்கதாக விதிக்கப்பட்ட ஆசார்யாத்நமான ஸ்ரீ அழகியசிங்கரின் திருநாம வைபவத்தை ஸங்க்ரஹமாக விஜ்ஞாபித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ அழகியசிங்கரின் திருநாமத்திலிருக்கும் 'லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக:' என்கிற விசேஷணமானது கீழ்க்கண்டுள்ள அர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றி ஸமர்ப்பித்திருக்கலாம். ஸ்ரீ பரதாழ்வான் சக்ரவர்த்தித்திருமகனை ஆராதிக்க ஆசைப்பட்டு அது நிறைவேறாமல் போகவே தத்ப்ரதிநிதியாக பாதுகைகளைப்பெற்று ஆராதித்துவந்தார். நம் ஸ்ரீ அழகியசிங்கரோவெனில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் அவருடைய பாதுகைகளையும் ஆராதித்து வருவதால் லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவகராக ஆகி (இவ்வர்த்தம் இதரேதரயோக த்வந்த்வஸமாஸத்தினால் ஏற்படுகிறது.) ஸ்ரீ பரதாழ்வானுக்கும் மேற்பட்டவரானார்.

வண்சடகோப

ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு நம்மாழ்வார் (சுனையிலிருந்து உத்ஸவபேரத்தை கோயிலில் ப்ரதிஷ்டை செய்வித்தபடியால்) கொடுத்த பிருது. இது ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் முதல் 'ஆழ்வார் தம் க்ருபையான ஹம்ஸமுத்திரை' என்கிறபடி ஆழ்வாரின் க்ருபையடியாக வந்த ஹம்ஸமுத்திரையை ஸ்ரீ அழகியசிங்கர் சாற்றிக்கொள்வதாலும், நம்மாழ்வார் மடம் என்று இம்மடத்திற்குத் திருநாமமாகையாலேயும் இவ்வர்த்தங்களை ஸூசிப்பித்துக்கொண்டு ஸார்த்தகமாகிறது.

ஸ்ரீ ஸ்ரீரங்க

முதல் ஸ்ரீ சப்தம் நம் அழகியசிங்கரின் ஜ்ஞாநாநுஷ்டானவைராக்யஸம்பத்தைச் சொல்லுகிறது. ஸ்ரீரங்கசப்தம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஆச்ரமஸ்வீகாரம் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் நடந்ததை ஸூசிப்பிக்கிறது. அதவா 'ஹாஷ்ரூம் ரஜூவிவாவாரு' என்கிறபடி பெரியோர்கள் ஸ்ரீரங்கம்போல் ஸ்ரீ பாஷ்யமும் பரமாத்மாவின் சேஷித்வப்ரகாசனம் செய்வதாலே ஸேவ்யத்வத்தை ஸ்ரீ பாஷ்யம் பெற்றதாக பணிப்பார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் பரமாத்மாவின் சேஷித்வத்தைப் பரக்க காலக்ஷேபம் ஸாதிப்பதை அடியொற்றி பாஷ்யம்போலே ஸமமாக சொல்லாமல் (உபமானோபமேய ஸ்தலத்தில் பேதம் தோற்றும்) ஸ்ரீரங்கமாகவே 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநாமமிட்டருளினர். அதவா பாவனத்வாதிகுணயோகத்தினாலும் இவ்விசேஷணம் ஸார்த்தகம்.

சடகோப

இவ்விசேஷணம் ஸ்ரீ அழகியசிங்கரின் பகவத்விஷயப்ராவீண்யத்தையும் ஸ்ரீ சடகோப ஸ்ரீ:' என்று திருவக்ஷரம் சாத்துவதையும் ஸூசிப்பிக்கிறது.

யதீந்த்ர

ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ பாஷ்யகாரரின் அபராவதாரர் என்கிற அம்சத்தை இந்த விசேஷணம் ஸூசிப்பிக்கிறது. தயாஹி — ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல் என்று ப்ரதம கைங்கர்யமாக விதிக்கப்பட்ட ஸ்ரீ பாஷ் காலக்ஷேபத்தை காலக்ஷேபபரர்களுக்கு நிரவதிக உபகாரம் செய்து நடத்தியதாலும் ஸ்ரீ பாஷ்யகாரர் அநுஷ்டானத்தைபின்பற்றித் தான் நடத்துவதாலும், ஸ்ரீ பாஷ்யம்போல்விசிஷ்டாத்வைதிகளுக்கு மிகவும் ஆவச்யகமான விசிஷ்டாத்வைதகோசநிர்மாணத்தினாலும், ஸ்ரீ பாஷ்யத்தில் வாக்யார்த்தம் சொல்லி மத்வ ஸ்வாமி முதலியவரிடத்தில் விசிஷ்டாத்வைதமே சிறந்ததுஎன்று ஸ்தாபித்தபடியாலும் ஸ்ரீ அழகியசிங்கர் பாஷ்யகாரரின் அவதாரபூதர் என்பது மிகையாகாது. ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ பாஷ்யத்தை சிஷ்யர்களுக்கு அநேகதடவை காலக்ஷேபம் ஸாதித்ததுமன்றியில் வைஷம்யமில்லாமல் எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களையும் வரவழைத்து மாலோலவித்வத்ஸதஸ்ஸை நடத்தியவர்களுக்கு ரயில்சார்ஜையும் ஸம்பாவனையும் செய்தது குறிப்பிடத்தக்கது.

மஹாதேசிகன்

நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ தேசிகனை ஸர்

வாத்மநா அநுஸரிப்பதாலும் அத்யாச்சர்யமான க்ரந்தநிர்மாண லோகோபகாரங்களினால் மஹாதேசிகனானார். ததாஹி— நிகமாந்ததேசிகன் அதிபால்யத்தில் 'வூதிஷாவிதவெஊாஷ: வூதிக்ஷிவுவஹிஉூதஃ' என்று ஸ்ரீநடாதூரம்மாள்செய்த அநுக்ரஹத்தைத்தாமே 'ஸ்ரீஉஹூூ௦ ஸூூாஉஸாவிதி' என்று அருளிச்செய்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீரங்கநாதயதீந்த்ரமஹாதேசிகன் (ஸ்ரீகளத்தூர் அழகியசிங்கர்) ஸந்நிதியில் பஞ்சஸம்ஸ்காரம்பெற்றகாலத்தில் 'சுஸள ஸூாஜ' என்று அநுக்ரஹிக்கப்பட்டார். இவ்வர்த்தம் ஸ்ரீ அழகியசிங்கர் தனியனில் பரக்கக்காணலாம்.

தவிர தேசிகனை மங்களாசாஸனம் செய்யப்புகுந்த குமாரதேசிகன் 'தேசிகன் பால்யத்தில் ப்ராசார்யாநுக்ரஹத்தினால் யோக்யத்வகுணவிசிஷ்டராக ஆனார் என்றும், (யோ பால்யே என்கிற ச்லோகத்தில் இவ்வர்த்தம்காணலாம்) 20 திருநக்ஷத்ரத்திற்குள் ஸகல வித்யைகளை அதிகரித்தபடியால் ப்ராஜ்ஞரென்றும், ஸம்ஸ்க்ருத நூல்களையும் தமிழ் நூல்களையும் செய்தருளினபடியால் ஸேவ்யரென்றும்' அறுதியிட்டார். இதைப்போல் க்யாதிலாபபூஜாவிமுகராகையாலே பவ்யரென்றும் (ய: க்யாதிலாபபூஜாஸு என்கிற ச்லோகத்தினால் அறியலாம்) மங்களாசாஸனம் செய்தருளினார். இவ்விசேஷணங்கள் நம் ஸ்ரீ அழகியசிங்கர் பக்கலில் பரக்கக் காணலாம். ததாஹி— திருச்சுகனூரில் பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹம் நம் அழகியசிங்கருக்கு கிடைத்தபடியால் யோக்யத்வமும், காசீ முதலிய ஸ்தலங்களில் சென்று வித்யையை அதிகரித்ததினால் ப்ராஜ்ஞத்வமும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ஸாரபோதினீமுதலிய ஸம்ஸ்க்ருத தமிழ்க்ரந்தங்கள் செய்தருளினபடியால் ஸேவ்யத்வமும், க்யாதிலாபபூஜாதிகளில் விமுகராகையாலே பவ்யத்வமும் அந்வயித்து ப்ரகாசிக்கின்றன. மேலும் ஸ்ரீமதுராந்தகத்தில் மூலதனத்துடன் கலாசாலா ஸ்தாபனத்தினாலும், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா வெளியீட்டினால் ஸகல லௌகிக வைதிக ஜநதோஷணத்தினாலும், மாலோலவித்வத்ஸதஸ்ஸினால் பண்டிதஜநஸந்தோஷணத்தினாலும் மஹாதேசிகரானார். ஆகவே ஸ்ரீ அழகியசிங்கரை நம்மாழ்வார் உடையவர் தேசிகன் இவர்களின் அவதாரம் என்று சொல்வது மிகையாகாது. இப்படிப்பட்ட லோகோபகாரம் செய்தருளின ஸ்ரீ அழகியசிங்கர் மூலமாக இன்னும் அநேகதர்மகார்யங்கள் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்த ஜனங்களுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் திருநாட்டுக்கெழுந்தருளியது 'ஹா ஹந்த ஹந்த நலிநீம் கஜ உஜ்ஜஹார' என்கிறபடி ஈடுகட்டமுடியாத நஷ்டமாகும்.

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கர்

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம், ராமபத்ராசார்ய ஸ்வாமி.]

ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஆஸ்தானகார்யங்களைச் செம்மையாக அநுஷ்டித்துத் தற்சமயம் சில தினங்களுக்கு முன் 42-வது பட்டம் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநாட்டுக்கெழுந்தருளியாயிற்று என்பதைக்கேட்டு உலகம் முழுவதும் துக்கஸாகரத்தில் மூழ்கியது என்பது மிகையல்ல.

இந்த அழகியசிங்கர், மடத்தை ஸம்ரக்ஷிப்பதற்காகவும் சிஷ்யர்களின் க்ஷேமத்திற்காகவும் செய்திருக்கும் கார்யங்களையும் ஸம்ப்ரதாயப்ரவசனத்தில் ஈடுபட்டு ஆழ்ந்த கருத்துக்களடங்கிய அரியபெரிய விஷயங்களையும் பண்டிதபாமர வாசியற எல்லோருக்கும் ஸுலபமாகப் புரியும்படி எளிய நடையில் உபந்யாஸங்கள் செய்த அழகையும் நினைத்துப்

பார்த்தால் இவ்வழகியசிங்கர் திருநாட்டிற்கு எழுந்தருளியது நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ர தாயத்திற்கு ஈடுசெய்யமுடியாத அவ்வளவு பெரிய நஷ்டமே.

இந்த அழகியசிங்கர் இன்னும் கொஞ்ச காலம் இந்த லீலாவிபூதியிலேயே எழுந்தருளி யிருந்தால் லோகக்ஷேமத்திற்காக இன்னும் பல நன்மைகளைச் செய்ய ஸௌகர்யமிருந்திருக் கும். அப்படிக்கில்லாமல் சீக்கிரத்திலேயே திருநாட்டிற்கு எழுந்தருளியதை நினைத்தால் 'காலோ ஹி து³ரதிக்ரம:' [காலத்தை யாரும் மீறமுடியாது] என்பது வ்யக்தமாகிறது. இப்படி நித்யவிபூதிக்கு எழுந்தருளிய அந்த அழகியசிங்கரைக் குறித்து அடியேனுக்குள்ள ஆழ்ந்த துக்கத்தை அந்த அழகியசிங்கரின் திருவடிஸம்பந்தம்பெற்றவர்களுக்கும் அநு பந்திகளுக்கும் இதனால் தெரிவித்துக்கொள் கிறேன். நிற்க

தற்சமயம் உலகத்தில் எங்குபார்த்தாலும் ஜனங்கள் உண்ணஉணவின்றியும் உடுக்கஉடை யின்றியும் தங்க இடமின்றியும் தவிக்கின்றார் கள். இதற்குக் காரணம் பொதுஜனங்கள் வர்ணாச்ரமதர்மத்தைக் கைவிட்டதே. அப் படிக் கைவிட்டதற்கும் காரணம் அவைகளை நாம் ஆசிரியர்களிடம் முறைப்படி கேட்காத தால் அவைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாம லிருப்பதுதான் தர்மத்தைவிட்டுவிட்டு புத்தி யில் தோன்றினபடி செய்கிறோம்.

'ஸந்த்⁴யா ஸ்நாநம் ஜபோ ஹோம: தே³வ-
தாநாம் ச பூஜநம்। ஆதித்²யம் வைச்வ-
தே³வஞ்ச ஷட்கர்மாணி தி³நே தி³நே ॥'

ப்ராஹ்மணனுக்கு ஸ்நாநம், ஸந்த்யோபாஸ னம் ஔபாஸனாதி ஹோமங்கள், பகவதாரா தனம் முதலான தர்மங்களை தினமும் செய் தாகவேண்டுமென்றிருக்கிறதே எத்தனைபேர் இதை அநுஷ்டித்துவருகிறார்கள்?

'புண்யஸ்ய ப²லமிச்ச²ந்தி புண்யம் நே-
ச்ச²ந்தி மாநவா:। ந பாபப²லமிச்ச²ந்தி பா-
பம் குர்வந்தி யத்நத:॥'

மனிதர்கள் புண்யத்தின் பலனான வீடு, வாசல், காசு பணம், முதலான ஸௌகர் யத்தை மாத்ரம் ஆசைப்படுகிறார்களே தவிர அதற்குக் காரணமான புண்யகர்மாவைச் செய்வதில்லை. பாபத்தின் பலனான வ்யாதி, ஹிம்ஸை, நரகம் முதலியவைகளை விரும்புவ தில்லை. ஆனால் பாபத்தை மாத்ரம் எப்படி யாகிலும் முயன்று செய்கிறார்கள் என்கிறார் ஒரு கவி. ஆதலால் 'இது தர்மம்; இதை இப்படிச் செய்யவேண்டும். இதன் பலன் இது. இதைச்செய்யக்கூடாது, செய்தால் கெடு தல் விளையும்' என்று தெரிந்துகொள்ளாமல் ஜனங்கள் அஜ்ஞாநத்தால் க்ருத்யத்தைச் செய்வதில்லை. அக்ருத்யத்தைச் செய்கிறார் கள். இப்படி தர்மத்திற்கு ஒரு வாட்டமும் அதர்மத்திற்கு அபிவ்ருத்தியும் ஏற்படும் ஸமயங்களிலெல்லாம் 'பரித்ராணாய ஸாதூ⁴நாம்' 'ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³' என்று சொன்ன பகவான்தான் இங்கு அவதரித்து, தலை யெடுத்துத் தாண்டவம் செய்கிற அதர்மத்தை தொலைத்து தர்மத்தை ஸ்தாபித்து, ஜனங் களை தீயநெறியிலிருந்து காத்துத் தஞ்சமளிக் கிறார் என்று சாஸ்த்ரங்கள் சொல்கின்றன. அப்படி பகவான் செய்யுமவதாரங்களில் ஆசார்யாவதாரம் சாலச்சிறந்தது என்பர்.

'ஸாக்ஷாந்நாராயணோ தே³வ: க்ருத்வா
மர்த்யமயீம் தநும்। மக்³நாநுத்³த⁴ரதே
லோகாந் காருண்யாச்சா²ஸ்த்ரபாணிநா ॥'

என்று சொல்லப்படுகிறது.

ஆகவே அந்த பகவானே தான், ஆசார்யா வதாரம் செய்கிறார் என்பதை வலியுறுத்தவே ஸாக்ஷாத்பகவான் லக்ஷ்மீந்ருஸிம்ஹனே அதே திருநாமத்தோடு 'ப்ரதி³வேஷு ப⁴வ ந்ருஸிம்ஹ:' என்பதையொட்டி தேவனார்விளாகம் ஸ்ரீக்ரா மத்தில் இந்த மஹானிடம் (43-வது பட்டம் அழகியசிங்கரிடம்) அநுப்ரவேசித்து தற் சமயம் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளியிருக் கிறபடி.

இப்படி உத்தமமான கல்யாணகுணங்கள் நிரம்பி, ஏராளமான சிஷ்யர்களுக்கு ஆசார்ய

தையை வஹிக்கும்படியான யோக்யதையையும் பெற்று பூர்வாச்ரமம் முதலே நல்ல அநுஷ்டாதாவாகவும், வைராக்யஸம்பன்னராகவும் ஜ்ஞாதாவாகவும், ஆஜாநசுத்தராகவும், பகவத்பக்தி உள்ளவராகவுமிருக்கிற ஓர் மஹானை 43-வது பட்டம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய க்ருபாகடாக்ஷத்தாலடைந்து நிறம்பெற்றது. இதனால் நமதழகியசிங்கர் திருவிற்கும் திருவாகிய செல்வனன்றோ! இப்படி அந்த ஸ்தானத்திற்கும் நமது அழகியசிங்கருக்கும் ஏற்பட்ட சேர்க்கை ரஸிகஜனங்களுக்கு பரமலாபமல்லவா!

ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் குணபக்ஷபாதியாகவே இருந்து இந்த 43ம் பட்டத்திற்கு ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபமஹாதேசிகனை நியமனம் செய்தது பொதுஜனங்களெல்லாருக்கும் அளவிடமுடியாத ஆநந்தமே. இப்படி இவ்வழகியசிங்கரைப் பெரிய அழகியசிங்கர் நியமனம்செய்த உள்ளத்தின் பரிபாகத்தை ஆலோசிக்கின்ற நமக்கு 'ஶைத்யம் ஹி யத்ஸா ப்ரக்ருதிர்ஜலஸ்ய' [ஜலத்திற்கு ஸ்வபாவம் குளிர்ச்சியே] என்பதுபோல மஹான்களின் மனோபாவம் தர்ம்யவழிகளில்தானே செல்லும். வேறுவிதமாக இருக்காதன்றோ, என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

இவ்வாறு 43ம் பட்ட ஸ்ரீ அழகியசிங்கரின் பெருமையை 1921-ம் வருஷம்முதல் திருவையாற்றிலிருந்தே நேரிட அனுபவித்திருக்கிறபடியால் எவ்வளவு சொன்னாலும் போதாது. 'ஈதிக்ஷயாணிவ தஸ்மின் ந ஶோபிநு ஶுணக்ஷயாஸ' 'தஸ்யைவ ஶுணஸம்பந்நம் ராமம் ஸத்யபராக்ரமம் | லோகபாலோபமம் நாதம் அகாமயத மேதிநீ ॥' என்று பூமிதேவி பெருமாள் ராமபத்ரனைத் தனக்கு நாதனாக ஆசைப்பட்டதுபோல 43-ம்பட்டம் தனக்கு நாதனாக இந்த ஸ்வாமியை ஏற்றுக்கொண்டு 'உபதஸ்த்ரு ஈஹோஹநாணி ஸர்வாண்யஹ்நாணி ராகவம் ஸர்வஸ்ய ஈஷிதாஸ்ஸர்வே ராமம் ப்ராஞ்ஜலயஸ்ததா ॥ ஜஹேஷ வர்ஷோதாரா: கிங்கராஸ்ஸ ராகவ | யச்சிந்த்யஸி ஹ்ருத்யே தத்ஸர்வம் கராவாமஹே ॥' என்றபடி நிர்வாஹ்யமான கார்யங்களில் பணிவிடைசெய்யத் தயாராக இருக்கிறது.

'ஸம்ஸாரஸாகரமக்னாநாம் ஸர்வேஷாம் உத்தாரணம் ஸஸுத்ரஸஹாய: ராஜேந்த்ர வர்ஷதாம் ரவம் தயா ॥' என்கிறபடி ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் நீடூழிகாலம் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்து ஆஸ்தான நிர்வாஹங்களைச் செய்துகொண்டும் காலக்ஷேபாதிகளை ஸாதித்துகொண்டும்

க்ஷாந்த்யாயிஸ்ஸ்விகீர்த்யதாம் ப்ரதிதிநம் விக்ஷாஸ்யம் ஹ்ருத்யதாம் ஸ்வாத்மம் நதந்யாவ்யதாம் வியிவஸாஸ ப்ராவேந ஸந்தோஷ்யதாம் ஸ்ரீதோஷாஜிவிஷஹ்யதாம் நதவ்யா வாக்யம் ஸந்தோஷயதாம் ஸௌவாஸீநீஸீஸ்ஸ்வதாம் ஜநக்ருவா நிவேஷ்யதாம் ஸந்தஸ்ஸஜ்யதாம் ॥

வேதோ நித்யமதீயதாம் ததுதிதம் கர்ம ஸ்வநுஷ்டீயதாம் என்று இம்மாதிரியான ஸதுபதேசங்களையுமநுஷ்டானங்களையும் அதிகாரிகள் எல்லோருக்கும் எப்பொழுதுமனுக்ரஹம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும்படியும் இந்த சோபை சாச்வதமாக இருக்க வேண்டுமென்று ஸ்ரீ கோமளவல்லீஸமேத ஸ்ரீ அபர்யாப்தாம்ருதன் திருவடிகளில் எப்பொழுதும் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

சரமச்லோகங்கள்

(3)

[ஸ்ரீ. உப. வித்வான் ரங்கநாதாசார்ய ஸ்வாமி.]

स्वस्ति नन्दननामके दिनकरे सिंहं गते श्रावणे
पक्षे प्राथमिके तिथौ रविदिने उत्तरे फल्गुनीभे ।
श्रीमद्रङ्गशठारिदेशिकयतिश्रेष्ठो गुणाढ्यो गुरुः
श्रीलक्ष्मीनरसिंहदिव्यसंयमिप्रष्ठ्याप विष्णोः पदम् ॥ 1

नन्दनाब्दे सिंहकृष्णप्रथमारविवासरे ।
श्रीरङ्गसंयमीन्द्रोऽपि भेजे स्वीयगुरोः पदम् ॥ 2

किं शक्यते प्रवक्तुं तत्काले सायिसाक्षिकविकारः ।
भगवद्भक्तिसारवतो ब्रह्मानन्दानुभूतिपरिवाहः ॥ 3

श्रीमद्वैष्णववंशवर्यवरयोः वन्द्यप्रसिद्धोदितः
श्रीरामानुजदर्शनस्य विजयः श्रीमद्ध्वजः वाहितः ।
श्रीमद्देशिकसंप्रदायविजयप्रस्थं समास्थापितं
प्रत्येषः क इह प्रभो वरद ते श्रीपादविन्यस्तात्मनः ॥ 4

श्रीरङ्गनाथयतिपादयुगं हृदयेऽधिवसति ध्रुवं ध्रुवमेव निर्भयं स्यात् ।
स्वसंभावनयैव नन्दनं नयसि प्रीयतां जगन्नाथे ॥ 5

भद्रं हन्त हास्यसायावरितः को वा विलक्षं विलोक्य
सन्देहाकान्तिकस्य वास्य जगत्सुखं प्रवक्ता तन्त्रकः ।
दन्तरायं नियमान्तदेशिकशिरां भावं प्रभावत कः
को वा वक्ष्यति नः परात्परशिरां सारस्य सन्त्यागरत् ॥ 6

याते ध्रुवं सर्वविद्याप्रवचननिपुणे रङ्गनाथयतीन्द्रे
तर्कः कालक्षयमेव ध्रुवं प्रतिकविस्रावकृतिर्व्याकृतिश्च ।
वीणासा योगमेव स्तुतिततिरगतिः प्रासमात्मेति भावो
व्यवस्थं यन्त्रशास्त्रं स्वविश्वपि न भवेदुत्तवेदान्तविद्या ॥ 7

परित्यज्य प्रसन्नां परिचितविषयेष्वप्रमेयामपि
विहायाहो प्राज्ञा वदत विगतास्तं कृतिसाराः ।
स्वतन्त्राः सन्तो ये स्व विद्ये निवेशेषु प्रपन्नाः
विद्या विनाशो जगति निविडे स्वस्थतिसारः ॥ 8

हा हन्त हन्त जगदद्भुतं महदेव लोकद्वयस्य कयमेतदहमेदहो ॥

[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 10

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 11

[illegible] ।
[illegible] ॥ 12

[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥ 13

[illegible]

(4)

[ஸ்ரீ. உப. வித்வான். நாவல்பாக்கம் ஸ்ரீக்ருஷ்ணதாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] । 1

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 2

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 3

[illegible]
[illegible] ।

ப்ரத்யூஹம் பஹுமாநபக்திநிதஸ்ஸாநிவாஸம் ஸ்ரிதாம் ஸாதரம்
ஶக்தோ ஹாஸிவாதவக்ஷஜஜதாதாஸ்யாவயது ஸ்வாஸ்யா ॥ 4

நாநாதிவ்யவதேஷு ரங்கஸம்ஜ்ஞிக ஶ்ரீரங்கநாதேவ்யவஸ்தம்
ஜீர்ணோத்தாரணதவ்யமேவ ஶோதாஸாதாதிநிர்மாணக்ருத் ।
தேவேஶஸ்ய மஹாவநேஷு ஶுஷ்கமஹாவஸ்த்ராதிகேங்கர்யக்ருத்
வஸ்வேந்ஷ்ணவேந்ஷூதீநதோகநிவஹம் வர்ஷாதி நிஷாதய: ॥ 5

ஶ்ரீவ்ருந்தாவநேஷு ஸங்கீர்தநாகஶோரஶோஷவஸாத்
ஸாத்ராஹ்யாம் ஸாவஶிஷ்க்ருதாம் ஸாமஜிதாம் ஸவந்தாயந்ஸதஶீந்
நீத் ।
ஶ்ரீநாதாஹஸிவியாம் ப்ரகடயந் ஸவேந்தவஜீவ்யாம் ஸதா
க்ருஹேஶோவஶோரவஸ்துக்ருதாஸாரம் ப்ரவார்யாவ்யாத் ॥ 6

வோரய்யம் வேஷ்டதஷே ரவஸ்துக்ருதாவாவே வாய்யேவேஷ்விதே
வீக்ஷாரண்யஜஹ ப்ரஸிதவிஹவே வேணோ வஸங்க்ஷாது ।
கதேதே கிஙாக்ருஹாயஹமீக்ருவயா ஶப்த்யஸ்பதிஸ்ஸ்தவே
ஹேஜ ஶாஸ்வதஷேவ தத்வஶோஹோ வேராக்யஸம்வஸய: ॥ 7

ஶ்ரீ:

(5)

[ஸ்ரீ, உப. வித்வான், ஆசுகவி, வில்லூர், ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.]

நநு நகரே கிருஷ்ணப்ரயாணநிஶி ரவிதிவஸே பரஹம்ஸத்யாத் ।
க்ருபாயாத்ஹீம் ப்ராப மஹாத்மா யோகிவரேண்யா ரங்கஶாஸி: ॥ 1

ஸாந்த்ரோம் பரமோ ஹி ஹம்ஸ இதி யம் ப்ரத்யக்ஷ ஏவ ஹிதோ ரவி:
காந்தாஹ: ப்ரவிவேஶ தஸ்ய தத்தம் ஜ்ஞாத்வா பதம் யோகிராட் ।
ஸவேந்ஷாம் நிஶி வாதரோந்த்ரஹ்நி ஹரிவாம்ஸ்ஸ்வேவ த்ரும் திநே
ஶிக்ஷா தம் பரம் பதம் ஸமஜஸ்த்யம் ஹி ஹம்ஸோத்தம: ॥ 2

ஶ்ரீரங்கஶாஸியோகிநாவதிஸத்யம் ஸ்ரீநியந்தாஸந
ஸ்தாரே தஸ்ய ஶாந்தே ஜகதி யத்யம் பாதம் ஸஶாகாநுஹீந் ।
ஹாஷ்யம் ஹாஷ்யக்ருதா ப்ரவதிந்தஶயோ விஷ்ணுயந் ஹரீதே
காலே காஶவயோதகோஶஜாவே: பாதள வஹத்யாநத: ॥ 3

யோகோரய்யம் ஹி ஶிவ: கஶாநியயா: காலம் ஶாந்தோரய்யம் விதி:
யோகோ யத்ர ஸரஸ்வதீ விஜயதே ஹஸியோ ரஸஜ்ஞாத்ருதா ।

[illegible]
[illegible] 4

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 5

[illegible]
[illegible] 6

[illegible]
[illegible] 7

[illegible]
[illegible] 8

[illegible]
[illegible] 9

[illegible]
[illegible] 10

[illegible]
[illegible]
[illegible] 11

[illegible]
[illegible] 12

———

ஸ்ரீ:

(6)

[ஸ்ரீ. உப. வித்வான், உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, திருப்பதி.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 1

[illegible]
[illegible]

ராமாநுஜஸ்யார்யவர்யாச்ரிதாநாம் ஸாரஸாரார்த்தவேதிஶ்ஶாஸ்த்ர வேதாந்தஸாராந்
வேதாந்தார்த்தாவதாநப்ரவரவசஸி ச ந்யாஸநிஷ்டாநிதாநம் ॥ 2

ஸ்ருஷ்டா நாரஸிம்ஹே ஸ்திரநவதார்ண: ப்ராப்தஸிம்ஹாஸநஸ்ஸ-
